# சிவ தத்துவம்

ஸ்ரீ ஸ்ரீமத்
பக்தி வேதாந்த நாராயண மகாராஜா

*First Edition :* June 2008

*Published by* **Centre for Bhakti Studies**
Mechanicsburg, PA, USA
www.bhaktistudies.com
e-mail : igvt.hbg@gmail.com,
by permission from GVP

*Printed by* Vaigai Achagam
Madurai - 625 001

# முகவுரை

எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவிருப்பத்தால் தோன்றியவரே சிவபெருமான். கிடைத்தற்கரிய இந்த மனித ஜன்மத்தை எடுத்த ஒவ்வொருவரும் சிவ தத்துவத்தை சரியாக அறிய வேண்டியது மிக அவசியம். அவரை சங்கரர் என்றும், சுயம்பு என்றும், மகேஸ்வரர் என்றும் பற்பல பெயர்களில் அழைக்கின்றனர். ஆனால் அவரது ஆதிமூலம் பலருக்குத் தெரியாது! வேத சாஸ்திரங்களின்படி அவரது மூல ஸ்வரூபம் கோபீஸ்வரர் என்பதை மிகச் சிலரே அறிந்திருப்பர். அவர் கோபீஸ்வரராக இருந்து ஒவ்வொரு ஜீவனின் ஆத்ம நலனுக்காக பக்தியை வழங்குவது மட்டுமின்றி, எல்லா ஆன்மீக உலகங்களுக்கும் மேலாக இருக்கும் கோலோக பிருந்தாவனத்தில் வாயிற் காவலராகவும் இருக்கிறார்.

‘சிவ தத்துவம்’ என்ற இந்தச் சிறு நூலில் ஸ்ரீல நாராயண மகாராஜா, முக்கடவுள்களான பிரம்மா, விஷ்ணு, சிவன் இவர்களைப் பற்றி மிகவும் தெளிவாக விளக்குகிறார். மிகவும் பிரசித்தி பெற்ற கௌடிய வைஷ்ணவ சம்பிரதாயப் பின்னணியுடன், எல்லா சாஸ்திரங்களிலும் முடிவாகக் கூறப்பட்ட உண்மைகளை எடுத்து, சிவபெருமானின் மிக உயர்ந்த மகிமைகளை நமக்கு அவர் தெளிவாக அளிக்கிறார்.

மேலெழுந்த வாரியாகப் பார்த்தோமானால் சிவபெருமானின் குணம், செயல்கள் அனைத்தும் சில சமயங்களில் முரண்படுவதுபோல் தோன்றுகிறது. உதாரணமாக, அவரைச் சில சமயங்களில் அழிக்கும் தொழிலைப் புரிபவராகவும், சில சமயங்களில் படைக்கும் தொழிலைச் செய்பவராகவும் குறிப்பிடுகின்றனர். மேலும், சில இடங்களில் அவரைத் தாமஸ குணத்தினராகவும், மற்ற இடங்களில் முழு ஞானமும் நிறைந்த இறைவனாகவும் இப்படி முரண்பட்ட விதங்களாக எழுதப்பட்டுள்ளன. இந்தச் சிறு நூல், இதை ஆராய்ந்து அலசி உண்மையைத் தெளிவாக்குகிறது. சிவபெருமான் மிகவும் கருணையுள்ளவர். அதே சமயம் அவர் புத்திசாலித்தனமாக ஏமாற்றுபவரும் கூட! அவரது சகாக்களோ பூதங்களும், கணங்களும், குட்டிப் பிசாசுகளுமே! அதே சமயம், அவரை மிகவும் உயர்ந்த ஸ்தானங்களிலிருக்கும் தேவர்களும் முனிவர்களும் வழிபடுகின்றனர். பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமும் அவர் மிகவும் நெருங்கிய சம்பந்தம் உடையவர்.

சிவபெருமானின் அனைத்துக் குணங்களையும், தத்துவங்களையும், அவரது லீலைகளையும் பற்றி எழுதுவதாயிருந்தால் அது மிகப் பெரிய நூலாகிவிடும். இந்த நூலின் நோக்கம், உலக மக்களுக்கு உண்மையான ஞானத்தை எளிதாக வழங்கி, அவர்களை ஊக்குவித்து, சரியான ஆன்மீகப் பாதையில் செல்லத் தூண்டுவதேயாகும்.

சிவ தத்துவம், ஸ்ரீல சனாதன கோஸ்வாமி எழுதிய 'ஸ்ரீ ப்ருகத் பாக வதாம்ருதா' என்ற நூலைத் தழுவி ஆரம்பிக்கிறது. ப்ருகத் பாகவதாம் ருதாவின் நோக்கம், படிப்பவரை எல்லா யோகங்களிலும் சிறந்ததான பக்தியோகத்தில் ஈர்த்து, பிரேம பக்தியை அளிப்பதேயாகும். இதில் நாரத முனிவரும் சிவபெருமானும், வைஷ்ணவர்களின் பற்பல பக்தி நிலைகளைப் பற்றி ஆராய்கின்றனர். அந்த உரையாடலுக்கு பின்னணியாக ஸ்ரீல சனாதன கோஸ்வாமி கீழ்க்கண்ட நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார்.

"சிவபெருமான் தன் உறைவிடத்தில் அப்போதுதான் தன் இறைவனான ஸ்ரீ சங்கர்ஷணரை ஆடிப்பாடி பக்திப் பரவசத்துடன் வழிபட்டு முடித்துக் கொண்டிருந்தார். ஸ்ரீ நந்தி தேவர் முதலான அவரது அனைத்து பக்த சகாக்களும், சிவபெருமானைத் துதித்தும், பற்பல விதங்களாக பக்கவாத்தியங்களுடன் ஆடியும் பாடியும் 'ஜெயம்! ஜெயம்!' என்று கூவிக் கொண்டுமிருந்தனர். ஸ்ரீ பார்வதி தேவி, தன் தாமரைக் கைகளால் சிங்கி வாத்தியத்தை மிகவும் இனிமையான நாதத்துடன் தட்டினாள். அதைக் கேட்ட சிவபெருமான் பார்வதி தேவியைப் புகழ்ந்தார். இதையெல்லாம் நாரத முனிவர் தூரத்திலிருந்து கண்டு தன் இதயத்தினுள் புளகாங்கிதம் அடைந்து, திரும்பத் திரும்ப சிவபெருமானை நோக்கி விழுந்து விழுந்து நமஸ்கரித்தார். "நீர்தான் ஸ்ரீ கிருஷ்ணரின் மிக மிக நெருங்கிய பக்தன்! அவரது முழுக் கருணையையும் பெற்றவர்!" என்று சிவபெருமானைப் புகழ்ந்தார். தன் தந்தை பிரம்ம தேவர் சொல்லிக் கொடுத்ததுபோல் நாரதர் சிவபெருமானை இனிமையான மற்றும் அடக்கமான குரலில் துதித்தார். அது மட்டுமல்லாமல், கிருஷ்ண பிரேமையைப் பெற்று எப்போதும் அந்த பேரானந்தத்தில் திளைப்பவரும், வைஷ்ணவர்களுக்கெல்லாம் மிகப் பிரியமானவருமான ஸ்ரீ ருத்ரா(சிவன்)வின் பாதத் தூளியைத் தன் தலையில் இட்டுக் கொள்ள முயன்றார். அதைக் கண்ட சிவபெருமான், உடனே நாரத முனிவரைத் தடுத்து, அவரை அணைத்துக் கொண்டார். "பிரம்மரின் மைந்தரே! நீர் என்ன பண்ணுகிறீர்?" எனக் கடிந்து கொண்டார்.

*(ஸ்ரீ ப்ருகத் பாகவதாம்ருதா, அத்தியாயம் 3, சுலோகம் 1-5)*

ஸ்ரீ கிருஷ்ணரின் மிகப் பிரியமான பக்தர் சிவபெருமான் என்ற உண்மையை வேத சாஸ்திரங்களிலிருந்து வெளிநாடுகளுக்கு முதலில் எடுத்துக் கூறியவர் ஸ்ரீமத் A.C. பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதாவாகும்.



புதைந்து கிடந்த வேத சாஸ்திரப் பொக்கிஷங்களை உலக மக்கள் அனைவருக்கும் திறந்து வாரி வழங்கியவர் அவர்! அவரது வேண்டுதலின்படியேதான் இப்போது ஸ்ரீல நாராயண மகாராஜா உலகெங்கும், பக்தர்களைத் தேடிச் சென்று ஜாதி, மதம், நிறம் என்ற பேதமின்றி உலக மக்கள் அனைவருக்கும் ஆன்மீக அறிவையும் கிடைத்தற்கரிய பிரேம பக்தியையும் அள்ளி வழங்கி வருகிறார்.

சிவ தத்துவம் என்ற இந்தச் சிறு நூல் ஸ்ரீல நாராயண மகாராஜாவின் நான்கு சொற்பொழிவுகளிலிருந்து ஆக்கப்பட்டவை. அத்தியாயம் ஒன்றும் இரண்டும் 1997 ஆம் வருடம் ஜூலை மாதம் மூன்றாம் தேதி காலையிலும் மாலையிலும் அவர் ஹாலந்து நாட்டில் ஆற்றிய சொற்பொழிவுகளிலிருந்து எடுக்கப்பட்டவை. அத்தியாயம் மூன்று, 2000ஆம் வருடம் மார்ச் மாதம் ஐந்தாம் நாள் சிவராத்திரியன்று மதுராவில் அவர் அளித்த சொற்பொழிவிலிருந்து எடுக்கப்பட்டது. கடைசி அத்தியாயம் அவர் 2001 ஆம் வருடம் அக்டோபர் மாதம் பத்தாம் தேதி பூரி ஜகன்னாதர் புனித யாத்திரையின்போது லோகநாத மகாதேவர் கோயிலில் அளித்த உபதேசத்திலிருந்து எடுக்கப்பட்டது.

இந்த நூலைப் படிப்பவர்கள், மிக முக்கியமான ஒன்றை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். இதில் குறிப்பிடப்படும் எந்த சம்பவங்களும் எந்த மதத்துக்கும் சம்பந்தப்பட்டதல்ல. இவை அனைத்தும் உண்மையில் நடந்த சரித்திரங்கள். தங்கள் சிறு அறிவினால் புராணங்களின் ஆன்மீக உண்மைகளைப் பூவுலக ரீதியில் புரிய முடியாததால் மேலைநாட்டார் அவற்றை வெறும் தத்துவக் கதைகள் (mythology) என்று பிரித்தனர். ஆன்மீக சம்பவங்களை பூதவுலக அறிவினால் சுலபமாக அறிய முடியாது. அதுமட்டுமின்றி, நவீன மாயாவாதிகள் பற்பல விபரீதமான விளக்கங்களை அளித்து உண்மையை மறைத்து மக்களை மேலும் குழப்பி விடுகின்றனர். ஆன்மீக உண்மைகளை, ஸ்ரீ கிருஷ்ணரிடமே ஆரம்பித்து பரம்பரை பரம்பரையாக வரும் குருவினிடமிருந்து அறிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

இந்த நூல், எங்கள் குருதேவரான ஸ்ரீல நாராயண மகாராஜாவின் *'Siva Tattva'* என்ற ஆங்கில நூலை மூலமாகக் கொண்டது. இந்த தமிழாக்கத்தை நாங்கள் குருதேவரின் பாத கமலங்களில் தாழ்மையுடன் சமர்ப்பித்து அவரது கருணையை யாசிக்கிறோம். இந்தத் தமிழாக்கத்தில் ஏதேனும் பிழைகள் இருந்தால் தயவு செய்து பொறுத்தருளுமாறு பக்த கோடிகளைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

*நவம்பர் 10, 2007* — பகவதி காந்த தாஸா
*கோவர்த்தன பூஜை நாள்* சியாமலி தேவி தாஸி

### *Acknowledgement*

***Finance :***

Srimathi Nandhini Devi Dasi, Harrisburg, PA, USA

Srimathi Chandra Mukhi Dasi, Hawai

***Proof Reading :***

Srimathi Rajammal Elango, Madurai, India

Shri Elango Chellappan, Madurai, India

Srimathi T. Letchumy, Headmistress, Penang, Malaysia

Shri Ram Tulsi Das Prabu, Penang, Malaysia

***Arts & Painting :***

Front cover picture by S.M. Pandit (1916 - 93), a realistic classical painter in India. A painter and a humble bhakta, his paintings became offerings.

Srimathi Syamarani Didi

***Co-ordination :*** Sripad Achyuta Krishna Prabhu

***Published by :*** Bhakti Studies, PA, USA by permission by GVP

***Permissions :***

- Published in Tamil with the permission from Gaudiya Vedanta Publications (GVP).
- Permission to produce audio version of this book also has been granted by GVP.
- Permission to use paintings and art work was obtained from Smt. Syamarani Didi.

# அத்தியாயம் - 1

## சிவபெருமானின் மேன்மையான வரங்கள்

நாரத மகரிஷி ஒரு சமயம் சிவபெருமானை தரிசிக்கச் சென்று, அவரது மகிமைகளைப்பற்றிக் கூறி புகழ ஆரம்பித்தார். "எம்பெருமானே! தாங்கள் பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு மிகவும் நெருங்கியவர். அவரது முழு அன்புக்குப் பாத்திரமானவர். அது மட்டுமல்லாமல், நீவிர் ஸ்ரீ கிருஷ்ணரைத் தவிர வேறு யாருமல்ல. ஏனென்றால் நீவிர் அவரிடமிருந்தே உண்டானவர். உம்மால் முக்தியை மட்டுமல்ல, கிடைக்கப்பெறாத மிக அரிய மாணிக்கமான கிருஷ்ணப்பிரேம பக்தியையும் கூட அளிக்க முடியும்" என்று புகழ்ந்தார்.

இவ்வாறு நாரத முனிவர் தன்னை பற்பல வகைகளில் புகழ்வதைக் கேட்டு சிவபெருமான் உடனே கோபம் கொண்டு, "நாரத முனிவரே, நிறுத்தும் இந்தப் புகழ்ச்சியை! நீவிர் கூறியவை எதுவும் சரியல்ல. நான் ஸ்ரீ கிருஷ்ண பகவானின் நெருங்கிய அன்புக்குப் பாத்திரமானவனே அல்ல!" என்று மறுத்தார்.

உண்மையில் சிவபெருமான் ஸ்ரீ கிருஷ்ண பகவானின் முழு அன்பையும் நெருக்கத்தையும் பெற்றவர். இந்த நெருக்கத்தினால்தான் ஸ்ரீ கிருஷ்ணர், மிக முக்கியமான சேவைகளை சிவபெருமானிடம் மட்டுமே செய்யக் கொடுக்கிறார். உதாரணமாக, தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுக்கும்போது மேலெழும்பிய ஆலகால விஷத்தை, சிவபெருமானிடம் மட்டுமே விழுங்கக் கூறி, கோர விஷத்தில் எரிந்து கொண்டிருந்த உலகங்கள் அனைத்தையும் காப்பாற்றினார். தேவர்கள் அனைவரும் ஸ்ரீ கிருஷ்ணரிடம் விண்ணப்பித்தபோது, அவர் சிவபெருமானைத்தானே அந்த விஷத்தை விழுங்கக் கூறினார்! பின்னர் தேவர்கள் சிவபெருமானிடம் சென்று, "எம்பெருமானே, தயை கூர்ந்து எங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று முறையிட்டபோது, சிவபெருமான் அனைத்து விஷத்தையும் தன் கையில் எடுத்து வாயில் உட்கொண்டார்.



ஆனால் அவர் அதை விழுங்கத் தயங்கினார். ஏன்? "ஸ்ரீ கிருஷ்ணர் என் இதயத்தில் வீற்றிருக்கிறார். நான் இந்த விஷத்தை விழுங்கினால் அது அவரையல்லவோ பாதிக்கும்" என்று எண்ணி, அதை முழுவதும் விழுங்காமல் தன் தொண்டையிலேயே வைத்துக் கொண்டார். ஆனால் அந்த விஷம் அவரது தொண்டையை எரித்து, அதை நீல நிறமாக்கியது.

சிறிது தாழ்மையான குரலில் சிவபெருமான் நாரதரிடம் கூறினார்: "எனக்கு, ஸ்ரீ கிருஷ்ணரின் முழு அன்பைப் பெற ஆசைதான். ஆனால் எனக்கு அது கிடைக்கவில்லை. உமக்குத்தான் தெரியுமே, நான் எப்போதும் சுடுகாட்டுச் சாம்பலை என்மேல் பூசிக் கொண்டும் மண்டை ஓடுகளை மாலையாக அணிந்து கொண்டுமிருக்கிறேன். என் சகாக்களோ, பூதங்களும் பிசாசுகளுமே! எனவே நான் ஸ்ரீ கிருஷ்ணரின் அன்பைப் பெறத் தகுதியற்றவன். அவர் என்னிடம் அவ்வளவு அன்பு வைத்திருந்தால் எனக்கு ஏன் அவர் தாமஸ குணத்துடன், எவருக்கும் அச்சமளிக்கின்ற உலகங்களைஅழிக்கும் தொழிலை அளித்துள்ளார்? அது மட்டுமல்ல, நான் அவரது அன்புக்குப் பாத்திரமாயிருந்தால் எதற்காக என்னை அவர் சங்கராச்சாரியாராகப் பிறக்க வைத்து அவருக்கு எதிரான உபதேசங்களைக் கூற வைத்தார்?"

ஆனால் உண்மை என்ன? சிவபெருமான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு மிகப் பிரியமான காரணத்தினால்தான் அவரைச் சங்கராச்சாரியாராக* அவதரிக்க வைத்தார். ஏராளமானவர்கள் இறைவனைத் தங்கள் தன்னல ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்காக மட்டுமே வழிபட்டார்கள். "இறைவனை வழிபட்டால், அவர் மகிழ்ந்து நமக்கு வேண்டிய உலக செல்வங்கள் அனைத்தையும் வழங்குவார். நாம் மிக மகிழ்ச்சியுடனும் வசதியுடனும் பெரும் பேறுடனும் வாழலாம்" என்ற குறிக்கோளில்தான் அவர்கள் வழிபடுகின்றனர். சுருக்கமாகக் கூறப்போனால், அவர்களுடைய வழிபாட்டின் நோக்கம் இறைவனை மகிழ்விக்கவோ அல்லது அவருக்கு சேவை செய்யவோ அல்ல. "இது மிகவும் ஆபத்தானது" என்று ஸ்ரீ கிருஷ்ணர் யோசித்து, சிவபெருமானிடம், "இந்த மாதிரியான பொய் பக்தர்கள் என்னுடன் வாழ மாட்டார்கள்.

* சிவபெருமான் இங்கே குறிப்பிடுவது அத்வைதவாதியான ஸ்ரீபாத சங்கராச்சாரியாரின் சரிதத்தையே. சங்கராச்சாரியார் தோன்றுவதற்கு முன்னர் (சுமார் 1500 வருடங்களுக்கு முன்) சூன்ய தத்துவத்தைக் கொண்டுள்ள புத்த மதம் புகழோங்கியிருந்தது. அது வேதங்களை வேண்டாமென்று கழித்தது. ஆனால் சிவபெருமானின் அவதாரமான சங்கராச்சாரியார் புத்த மதத்தைத் துரத்துவதற்காக அத்வைத மார்க்கத்தைப் பரப்பி, பக்தியற்ற ஒரு மார்க்கத்தை உண்டுபண்ணினார். மேலும், ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே என்று போதித்து, கிருஷ்ண பிரேமையை விரும்பாத ஜீவன்களையும், உலக ஆசைகளுக்காக மட்டுமே இறைவனை வழிபடுபவர்களையும், இறைவனின் பாதங்களில் சரணடைய விரும்பாதவர்களையும் பிரித்தார்.

மாறாக, அவர்கள் குழப்பதையே உண்டு பண்ணுவார்கள். எனவே அவர்களை என்னிடமிருந்து வெகு அப்பால் வைக்க வேண்டும். அவர்களுக்கு ‘பிரம்ம சத்யம் ஜெகன் மித்யா’ - அதாவது பிரம்மம் ஒன்றே உண்மை, இந்த உலகம் பொய் என்பதை உபதேசிக்க வேண்டும். மேலும், ‘எல்லா ஜீவன்களும் சிவனே. எல்லா ஜீவன்களும் உருவமற்ற பிரம்மம். நீதான் பரம இறைவன். நீ வேறு எந்தக் கடவுளையோ தேவர்களையோ வழிபட அவசியமேயில்லை’ என்றும் போதிக்க வேண்டும்” என்று கட்டளையிட்டார். இதைக் கேட்டு சிவபெருமான் தயங்கினார். “இந்தக் கட்டளையைச் செயல்படுத்த என்னிடம் தகுதியே கிடையாது. தயை கூர்ந்து வேறு தகுதியுடையவரிடம் அளிப்பீராக” என்று விண்ணப்பித்தார். ஆனால் ஸ்ரீ கிருஷ்ண பகவானோ, “இல்லையில்லை. அனைத்து உலகங்களிலும் உம்மை விடவும் தகுதியுள்ளவர் எவரும் கிடையாது. எனவே இந்த முக்கியமான செயலை நீவிர் மட்டுமே புரிய வேண்டும்” என்று சிவபெருமானிடம் வற்புறுத்தினார்.

சிவபெருமான் வெட்கத்துடன் நாரதமுனிவரிடம் கூறினார், “கடைசியாக நான் ஸ்ரீகிருஷ்ணரின் கட்டளைக்கு இணங்க வேண்டியதாயிற்று. நான் சங்கராச்சாரியாராக அவதரித்து - எல்லா இடங்களிலும் உபதேசித்தேன், ‘நீதான் பிரம்மம். நீதான் பரப்பிரம்மம். நீதான் உருவில்லாத பிரம்மம். அனைத்து உலகங்களும் பொய்’ என்று! ஆனால் இப்போது நான் அதை நினைத்து மிகவும் வருத்தப்படுகிறேன். எண்ணிலடங்காத ஜீவன்களை நான் ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து பிரித்து விட்டதால் நான் பெரிய தவறைச் செய்துள்ளேன். ஸ்ரீகிருஷ்ணரின் கட்டளையின் பேரில் மட்டுமே நான் இந்த பொய்த் தத்துவத்தை உபதேசித்தேன். இப்படிப்பட்ட கட்டளைகளை ஸ்ரீகிருஷ்ணர் என்னிடம் மட்டுமே அளிப்பதால் நான் அவருடைய முழு அன்புக்குப் பாத்திரமானவனல்ல என்று எண்ணுகிறேன்.”



## ஏமாற்றுபவரை ஏமாற்றுதல்

மேலும் சிவபெருமான் நாரத முனிவரிடம், தான் எவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணரின் பகைவர்களுக்கும்கூட வரங்களைக் கொடுத்ததைப் பற்றிக் கூறி வருத்தப்பட்டார். ஸ்ரீ கிருஷ்ணரின் விருப்பங்களுக்காக இராவணன், விருக்காசுரன், ஸால்வா, ஜயரத்ரன் இப்படிப் பற்பல அசுரர்களுக்கு அவர் வரங்களை அழித்ததை விவரித்தார். இவை கிருஷ்ண பக்திக்கு எதிரான செயல்கள் போல் தெரிந்தாலும் அவை கிருஷ்ணரின் விருப்பங்களின் பேரில் செய்யப்பட்டவைகளே.

இதைக் கேட்ட நாரத முனிவர் கூறினார், “எம் பெருமானே! நீவிர் என்னைத் தவறான முடிவுக்கு வரத்தூண்டுகிறீர்! நீவிர் செய்வது அனைத்தும் ஸ்ரீ கிருஷ்ணரின் லீலைகளுக்காக என்பது எனக்கு மிக நன்றாகவே தெரியும். அவற்றால் உலக ஜீவன்களுக்கு நன்மைகளே பயக்கும். ஸ்ரீகிருஷ்ணரின் எதிரிகளுக்கு நீங்கள் வரங்களும் உதவிகளும் அளித்ததைக் கூறினீர். ஸ்ரீ கிருஷ்ண பகவானின் எதிரிகளும் பாண்டவர்களின் எதிரிகளும் உம்மை வணங்கி துர்ச் செயல்களுக்காகவே உபயோகப்படுத்துகிறார்கள். அவர்களுக்கு தாங்கள் வரங்களை அளித்ததையும் நன்கு அறிவேன். ஆனால் அப்படி அளித்த எந்த வரமும் நிலையானதல்லவே! அவை அனைத்திலும் ஏதாவது ஒரு குறை அல்லது குதர்க்கம் வைத்தே அளித்தீர். தாங்கள் இவ்வாறான ஏமாற்று வரங்களை அளித்து மறைமுகமாக ஸ்ரீ கிருஷ்ணரை மகிழ்விக்கிறீர்! எனவே கொஞ்சம்கூட சந்தேகமில்லாமல் தாங்கள்தான் ஸ்ரீ கிருஷ்ணரின் அருமைக்குரியவர்!”

இவ்வாறு சிவபெருமானும் நாரத முனிவரும் ஒருவருக்கொருவர் தங்கள் விவாதங்களைத் தொடர்ந்து நடத்தினர். சிவபெருமான், தான் ஸ்ரீ கிருஷ்ணரின் அன்புக்குப் பாத்திரமானவரில்லையென்றும், நாரத முனிவர் அதற்கு எதிராகவும் சர்ச்சை பண்ணினார்கள்.

## ஏமாற்றும் வரங்கள்

இனி, மகாபாரதத்தில் ஜெயரத்ரன் என்ற அசுர மன்னன் எவ்வாறு சிவபெருமானை வழிபட்டு, மிகவும் புத்திசாலித்தனமான வரம் ஒன்றைப் பெற்றதைப் பார்ப்போம். பாண்டவர்களின் எதிரியான துரியோதனன் அவனது தங்கை துஷாலாவை ஜெயரத்ரனுக்கு மணம் முடித்து வைத்தான். துரியோதனன் பாண்டவர்களுக்கு உறவானதால், ஜெயரத்ரனும் பாண்டவர்களுக்கு உறவினன் ஆனான். இந்த உறவை உபயோகித்து, ஜெயரத்ரன் பாண்டவர்களின் மனைவியான துரௌபதியை தனக்கு மனைவியாக்க எண்ணி, அவளை பலவந்தமாக இழுத்துக் கடத்திச் சென்றான். துரௌபதியோ அழுது கொண்டு, “நான் பாண்டவர்களின் மனைவி. அவர்கள் உன்னைப் பிடித்தால் உன்னைக்

கடுமையாகத் தண்டித்துக் கொன்றே போடுவார்கள்" என்று கோபத்துடன் கூறினாள்.

ஜெயரத்ரனின் அகந்தை அவள் கூறியது எதையுமே கேட்க விடவில்லை. இதைக் கண்ட நாரதமுனிவர் உடனே பாண்டவர்களிடம் விரைந்து சென்று, துரௌபதியை ஜெயரத்ரன் கடத்திச் செல்வதையும் துரௌபதி அழுவதையும் எடுத்துக் கூறினார்.

உடனடியாக பீமனும் அர்ஜுனனும் தங்கள் ரதங்களைப் பூட்டி ஜெயரத்ரனைத் துரத்தினர். பீமன் தன் ரதத்தை ஜெயரத்ரனின் ரதத்தைவிட வேகமாக ஓட்டி அவனை நெருங்கினான். அர்ச்சுனன் தன் அம்புகளை ஏவி ஜெயரத்ரனின் ரதத்தைச் சுற்றிலும் தீயை உண்டுபண்ணினான். ஜெயரத்ரனினால் எங்கும் தப்ப முடியவில்லை. பீமனால் நன்றாக உதைக்கப்பட்ட ஜெயரத்ரனை ரதத்தில் கட்டி தர்மரான யுதிஷ்டிர மகாராஜாவிடம் கொண்டு சென்றனர். கோபத்தில் துடித்துக் கொண்டிருந்த பீமன், தன் மூத்த சகோதரனான யுதிஷ்டிரரிடம் கூறினான்: "தயவு செய்து உடனே கட்டளையிடுங்கள். ஜெயரத்னனை இப்போதே நான் கொல்ல வேண்டும்".

துரியோதனனும் பீமனுக்கு ஆதரவாக, "ஆம், இவ்வளவு கொடிய செயலைப் புரிந்த ஜெயரத்ரனை உடடினயாகக் கொல்ல வேண்டும்!" என்று கோபமுடன் கூறினான்.

மன்னன் யுதிஷ்டிரர் கூறினார், "குற்றம் துரௌபதியின்மேல் செய்யப்பட்டிருப்பதால், துரௌபதியைக் கேட்பதே சரி. இந்த வழக்கில் அவள் என்ன தண்டனை கொடுக்க விரும்புகிறாளோ அதை நிறைவேற்றுவோம்".

பீமனும் அர்ஜுனனும் ஜெயரத்ரனை துரௌபதியின் காலில் விழ வைத்தனர். துரௌபதியோ இரக்கம் கொண்டு தன் கணவர்களிடம் கூறினாள், "இவனைக் கொல்ல வேண்டாம். மன்னித்து விடுங்கள். அவன் நமக்கு ஒருவகையில் சொந்தமானவன். நீங்கள் இப்போது இவனைக் கொன்றால் உங்கள் மைத்துனி அல்லவோ விதவை ஆவாள்? அவள் தனது வாழ்நாள் முழுவதும் அல்லவா அழுது கொண்டிருப்பாள்?"

இந்த பதிலைக் கேட்டுக் குழப்பமடைந்த பீமனும் அர்ஜுனனும் ஸ்ரீ கிருஷ்ணரை அணுகிக் கேட்டனர், "பரந்தாமா! நாங்கள் என்ன செய்ய வேண்டும்? நாங்களோ ஜெயரத்ரனைக் கொல்வோம் என்று சபதம் வேறு செய்துள்ளோம்! ஆனால் துரௌபதியோ அவனை மன்னிக்கச் சொல்லுகிறாள்".

ஸ்ரீ கிருஷ்ணர் பதிலளித்தார், "எவன் ஒருவன் மிகுந்த மரியாதை பெற்றுள்ளானோ, அவனுக்கு அவமானம் என்பது சாவை விடவும் மோசமானது".



புரிந்து கொண்ட அர்ஜுனன், ஜெயரத்ரனின் தலைமுடியைக் கோரமாக மளித்தான். தலையில் ஐந்து இடங்களில் வட்ட வட்டமாக வெட்டாமலும், முகத்தின் ஒரு பக்கத்தில் மளித்தும் மறுபக்கம் அப்படியே விட்டும், பார்க்க அருவருக்கத்தகும் வகையில் ஆக்கியபின் ஜெயரத்ரனை விடுவித்தான். ஜெயரத்ரனுக்கு இந்த அவமானத்தைத் தாங்க முடியவில்லை. இறந்திருந்தால் எவ்வளவோ மேல் என்று எண்ணினான். எப்படியாவது பழிக்குப்பழி வாங்கியே தீர வேண்டும் என்று தீர்மானித்து, நேராக இமயமலையிலுள்ள கங்கோத்ரியை அடைந்தான். அங்கே சிவபெருமானை நோக்கி மிகக் கடும் தவம் புரிந்தான்.

சில மாதங்களில் எல்லாவிதமான ஆகாரங்கள், தண்ணீர் மற்றும் உடல் சம்பந்தமான அனைத்தையும் விட்டுவிட்டு, உயிரை விடும் தருவாயை அடைந்தான். அப்போது அங்கு சிவபெருமான் தோன்றி, "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார். ஜெயரத்ரன் பதிலாக, "நான் பாண்டவர்களைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும். அவர்கள் அனைவரையும் நான் வென்று கொல்ல வேண்டும்" என்று கேட்டான். சிவபெருமான் கூறினார், "நீ பாண்டவர்களில் யுதிஷ்டிரர், பீமர், நகுலன், சகாதேவன் இவர்களை வெல்லலாம். ஆனால் அர்ஜுனனை மட்டும் வெல்ல முடியாது".

திருப்தியடையாத ஜெயரத்ரன் சிவபெருமானிடம் கேட்டான், "உம்மால் எனக்கு வரத்தை நான் கேட்டவாறு தர இயலவில்லையென்றால், என்னை அர்ஜுனனோ வேறு யாருமோ கொல்ல முடியாத வரம் வேண்டும்!" அதற்கு சிவபெருமான், "வேண்டுமானால் என்னால் இப்படி ஒரு வரமளிக்க முடியும்: அதாவது உன் தலையை யாராவது கொய்து, அந்தத் தலை தரையில் விழுந்தால், உன்னைக் கொன்றவன் அப்போதே இறந்துவிடுவான். உனது தலையும் உன் உடலில் திரும்ப வந்து பொருந்திவிடும். உன்னை இவ்வாறு இலட்சக்கணக்கான முறை கொன்றாலும் நீ சாகவே மாட்டாய். ஆனால் உன் தலை கொய்யப்பட்டு அது உன் தகப்பன் கையில் விழுந்து அவர் அதைத் தரையில் போட்டால் மட்டுமே நீ இறப்பாய்" என்று வரம் அளித்தார். ஜெயரத்ரன் இதைக்கேட்டு, "என் தகப்பன் இதைச் செய்வாரா?" என்று எண்ணி வரத்தை வாங்கிக் கொண்டான்.

மகாபாரதப் போர் குருச்சேத்திரத்தில் ஆரம்பித்தபோது ஜெயரத்ரன் துரியோதனனின் பக்கத்தில் சேர்ந்து கொண்டான். போர் நடந்து கொண்டிருக்கும்போது ஒருநாள் அந்திவேளையில் ஜெயரத்ரனின் தகப்பனார் சூரிய நமஸ்காரம் செய்து கொண்டிருந்தார். கையில் தண்ணீரை எடுத்து அதைச் சூரிய பகவானுக்கு தாரை விட்டுக் கொண்டிருந்தார். இந்தத் தருணத்தை அர்ஜுனன் உடனே உபயோகித்தான். தன் ஒப்பற்ற வில் வித்தையினால் அம்பை எடுத்து ஜெயரத்ரனின் தலைக்கு இலக்கு வைத்து சரியாக அவன் தலை அவன்

தகப்பனின் கைகளில் போய் விழுமாறு எய்தான்! கண்களை மூடி சூரிய நமஸ்காரம் செய்து கொண்டிருக்கும்போது திடீரென ஏதோ கையில் விழுவதை உணர்ந்து திடுக்கிட்டு, அதை அவர் அப்படியே தரையில் தூர எறிந்துவிட்டார்! கையில் ஏன் வித்தியாசமான ஈரம் உள்ளது என்று கண்ணைத் திறந்து பார்த்தார். அவர் எறிந்த மகனின் தலை தரையிலே கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டார். "அருமை மகனே! நீ இறந்து விட்டாய்!" என்று அழ ஆரம்பித்தார்.

## புத்திசாலித்தனமான வரங்கள்

ஸ்ரீ கிருஷ்ணரின் மேல் பகைமை கொண்டு; எப்படியாவது கிருஷ்ணரை அழித்துவிட வேண்டும் என்று தீர்மானித்து, ஸால்வா என்ற அசுரன் சிவபெருமானை நோக்கிக் கடுமையான தவம் புரிந்தான். தினமும் ஒரு கைப்பிடி சாம்பலை மட்டுமே தின்று ஒரு வருடமாக தவமிருந்தான். சிவபெருமான் இதை அறிந்து மிகவும் மகிழ்ந்து அவனிடம் தோன்றி, "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார்.

ஸால்வா, சிவபெருமானிடம் ஒரு மாய சக்தி வாய்ந்த விமானத்தைக் கேட்டான். "அந்த விமானம் என் மனதினால் ஓட்டப்படுவதாக இருக்க வேண்டும். நான் என்னவெல்லாம் நினைக்கிறேனோ அவை அனைத்தையும் செய்யும் சக்தி அதற்கு இருக்க வேண்டும். நான் நினைப்பதுபோல், அது என்னை மற்ற லோகங்களுக்கோ, எங்கு வேண்டுமோ அங்கெல்லாம் கொண்டு செல்ல வேண்டும். உஷ்ண காலங்களில் அது இதமான குளிர்ந்த காற்றைக் கொடுக்க வேண்டும். அதில் இரண்டு பேர் பயணம் செய்யும்போது இரண்டு பேர்களுக்கு மட்டுமே இருக்கை இருக்க வேண்டும். ஆனால் அதில் இலட்சக்கணக்கான பேர்கள் பயணம் செய்தால் அது தானாகவே அத்தனை இருக்கைகளை உடனே அளிக்க வேண்டும். அந்த விமானத்தில் ஒருபோதும் எந்திரக் கோளாறு ஏற்படக் கூடாது. அதில் எல்லாவகையான போர் ஆயுதங்களும் இருக்க வேண்டும். அது யாதவர்கள் அனைவரையும் பீதி கொள்ள வைக்க வேண்டும்".

சிவபெருமான் ஸால்வா கேட்ட வரத்தைக் கொடுத்து மாயாதானவன் என்ற அசுரனின் உதவியால் ஸால்வா கேட்டபடி விமானம் உற்பத்தி செய்யப்பட்டது. ஸால்வா அதைக் கொண்டு ஸ்ரீகிருஷ்ணரின் இருப்பிடமான துவாரகையை அழிக்க ஆரம்பித்தான். ஸால்வா தன் விமானம் மூலமாக வானிலிருந்து தாக்கினான். அவனது படைகளோ தரைமார்க்கமாகத் தாக்கின. யாதவர்கள் பிரத்யும்னாவின் தலைமையில் எவ்வளவோ கடுமையாகப் போர் செய்தும் ஸால்வாவை வெல்ல இயலவில்லை.

கடைசியில் ஸ்ரீகிருஷ்ணரே போரில் நேரடியாக இறங்க வேண்டியிருந்தது. வெகு நேரமாக இருவரும் நேருக்கு நேராகப் போராடினார்கள். ஸால்வா தன் மாய சக்திகள் அனைத்தையும் காட்டினான். இறுதியில் ஸ்ரீ கிருஷ்ணர் தன் சக்கராயுதத்தை ஏவி, ஸால்வாவின் தலையைக் கொய்து அவனுக்கு மோட்சத்தை அளித்தார்.



இவ்வாறு சிவபெருமான், ஸ்ரீ கிருஷ்ணருக்கு எதிராக எவர் வரம் கேட்டாலும் அவர் வரம் அளிக்கும்போது அதில் ஏதாவது ஒரு குறையை வைத்துவிடுவார்! இவ்வாறு அளவில்லா அறிவுக் கூர்மையுடன், சிவபெருமான் ஸ்ரீ கிருஷ்ணரின் லீலைகளுக்கு உதவி புரிகிறார். நாரத முனிவர் இதை நன்றாகவே அறியவும் செய்வார். சிவபெருமானின் இந்த அற்புதச் செயல்களை எல்லோரும் அறிய வெளிப்படுத்த வேண்டும் என்பதே அவரது உள் ஆசை. ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து சிவபெருமான் வேறல்ல. ஸ்ரீ கிருஷ்ணருக்கு மிகவும் பிரியமானவர் சிவபெருமானே! அவருக்கு நாம் எப்போதும் பெரு மதிப்புக் கொடுக்க வேண்டும். அவரே ஸ்ரீ கிருஷ்ணரின் முதன் முதல் பக்தர்!

நிம்ன கானாம் யதா கங்கா
தேவாணாம் அச்யுதோ யதா
வைஷ்ணவானாம் யதா ஸம்பூஹ்
புராணாநாம் இதம் ததா.

*(ஸ்ரீமத் பாகவதம் 12 .13 .16)*

"எல்லா நதிகளிலும் கங்கா நதி உயர்ந்தது. எல்லா தெய்வங் களுக்கும் மேலானவர் ஸ்ரீ கிருஷ்ணர். எல்லா வைஷ்ணவர்களிலும் முதலானவர் சம்பூ (சிவன்). எல்லா புராணங்களிலும் உயர்ந்தது ஸ்ரீமத் பாகவதம்".

## சிவ தத்துவம்

பிரம்ம தத்துவம் முதலான அனைத்து தத்துவங்களைக் காட்டிலும் சிவ தத்துவத்தைப் புரிந்து கொள்வது என்பது மிகக் கடினமானது. பிரம்ம தத்துவம் அவ்வளவு கடினமானதல்ல, ஏனென்றால் பிரம்மா எப்போதும் ஒரு ஜீவாத்மாவே. அபூர்வமாக சில சமயங்களில் மட்டும் தகுதிவாய்ந்த ஜீவாத்மா இல்லாவிடில் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து தோன்றிய விஷ்ணு, தாமாக இந்தப் பதவியை ஏற்பார். ஆனால் அது மிக மிக அபூர்வமே.

பிரம்ம தேவர் வசிக்கும் சத்ய லோகம், மற்றும் எட்டுவிதமான பூதவுலக மூடிகள், இவை அனைத்தையும் தாண்டி, பின்னர் விரஜா நதியையும் தாண்டிய பின்னர்தான் சிவபெருமானின் இருப்பிடத்தை அடைய இயலும். அங்கே அவர் விஷ்ணுவிலிருந்து தோன்றிய சதா சிவமாக இருக்கிறார்.

சிவ தத்துவத்தை விளக்க, பாலுக்கும் தயிருக்குமுள்ள ஒரு உவமையை உதாரணமாகக் கூறலாம். பாலிலிருந்து தோன்றியதே தயிராகும். பால் தயிராக முடியும். ஆனால் தயிர் பாலாக முடியாது. பிரம்ம சம்ஹிதாவில் கூறப்பட்டிருக்கும் இந்த உவமையை ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி அவரது விளக்கத்தில் இவ்வாறு கொடுத்துள்ளார், “உருமாற்றம் செய்யும் பொருளினால் (அமிலம்) எவ்வாறு பால் தயிராக மாறுகிறதோ, அதேபோல் ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு தனிப்பட்ட காரணத்திற்காக ஸம்பூ (சிவன்) ஆகத் தோன்றுகிறார். காரணத்தையும் *(cause)* பலனையும் *(effect)* விளக்கவே இந்த உதாரணம் கொடுக்கப்பட்டுள்ளது - உருமாற்றத்தைப் பற்றி அல்ல. ஸ்ரீ கிருஷ்ணரின் உண்மை சொரூபம் மாறுவதில்லை. மாறாக, சிந்தாமணிப் படிகம் எப்படித் தன்னிடம் கேட்டவை அனைத்தையும் கொடுத்த பின்னரும் கொஞ்சம் கூட அதன் இயல்பில் மாறுவதில்லையோ அப்படியே ஸ்ரீ கிருஷ்ணர் மாறாமல் இருக்கிறார்”.

## இராமேஸ்வர மகாதேவா

ஸ்ரீ ராமச்சந்திர பகவான் இலங்கைக்குச் செல்லப் பாலம் கட்டும்போது அவர் ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தார். அப்போது அங்கிருந்த அனைத்து மக்களும் கூட, சிவபெருமானைத் துதித்தனர், “இராமேஸ்வரருக்கு ஜெயம்! நீவிர் ஸ்ரீ ராமச்சந்திரரின் ஈஸ்வரர்! ஸ்ரீ இராமரின் இறைவன்!” ஆனால் இதைக் கேட்ட தேவர்கள் அனைவரும் அதிருப்தி அடைந்து வானில் ஒலி எழுப்பினர், “ராமஸ் ச ஸௌ ஈஸ்வரஹ: ராமனும் இறைவன், சங்கரரும் இறைவன். அவர்கள் இருவரும் ஒன்றே”. அதைக் கேட்டதும் சிவலிங்கம் பிளந்து அதிலிருந்து சிவபெருமான் வெளிப்பட்டார்! எல்லோரையும் நோக்கி சிவபெருமான், “நீங்கள் முழு முட்டாள்கள். நீங்கள் எவரும் என் தத்துவத்தை அறிய மாட்டீர்கள். ஸ்ரீ ராமர் என்னுடைய அன்புக்குரிய இறைவன். அதனால் தான் என் பெயர் ராமேஸ்வரா” என்று கூறி மறைந்தார்.

## பரி பூரண பக்தியை அளிப்பவர்

சிவபெருமான் நிரந்தரமாக ஸ்ரீ கிருஷ்ணர் வசிக்கும் பிருந்தாவனத்தில் உறைந்துள்ளார். பற்பல வகைகளில் அவர் ஸ்ரீ கிருஷ்ணருக்குச் சேவை செய்கிறார். ஸ்ரீ கிருஷ்ணரின் விருப்பத்தால் அவர் அங்கு கோபீஸ்வர மகாதேவராக* வீற்றிருக்கிறார். ஸ்ரீ கிருஷ்ணர் ரஸ லீலாட்டம் ஆடுவதற்கு முன்னால், ஸ்ரீமதி ராதிகாவை அவரது இடது பக்கத்திலிருந்தும், கோபீஸ்வர மகாதேவரை அவரது வலது பக்கத்திலிருந்தும் உண்டு பண்ணினார். ஸ்ரீமதி ராதிகா, ஸ்ரீ கிருஷ்ணரின் ஆனந்த சக்தி சொரூபம். பூதவுலகில், காசி, கைலாசம் போன்ற இடங்களில் வீற்றிருக்கும் சிவன், இந்த மூல சதாசிவனிடமிருந்து தோன்றிய முழுமையற்ற *(partial)* சொரூபங்களே. அவைகள் மூல சிவனல்ல. மூல சதாசிவம் ஸ்ரீ கிருஷ்ணர் வாழும் கோலோக பிருந்தாவனத்தில் மட்டுமே உள்ளார். அவரால் மட்டுமே “பிரஜ பிரேமை”யை பக்தர்களுக்கு அளிக்க இயலும். மற்ற சொரூபங்களான ‘பிப்பலேஸ்வர மகாதேவர், பூத்தேஸ்வர மகாதேவர், ரங்கேஸ்வர மகாதேவர் போன்றவர்களால் பிரஜ பிரேமையை அளிக்க முடியாது.

---

* சிவபெருமானின் நித்ய ஸ்வரூபம் “கோபீஸ்வர மகாதேவர்”. அவரது கோபீஸ்வர லீலையை *‘Pinnacle of Devotion’* என்ற நூலில் கீழ்வருமாறு எழுதப்பட்டுள்ளது:

“ஒரு கோபியாக மாறி, தானும் ஸ்ரீ கிருஷ்ணரின் லீலையில் பங்கு கொள்ள வேண்டும் என்று ஆசை கொண்டு சிவபெருமான் மிகக் கடும் தவமிருந்தார். அதைக் கண்ட யோக மாயையான பௌர்ணமாசி மிகவும் மகிழ்ந்து, அவர் முன்னால் தோன்றினாள். சிவபெருமானின் வேண்டுதலை அறிந்து அவரைப் பிரம்மகுண்டம் என்ற புனித தீர்த்தத்தில் முக்கினாள். அவ்வளவுதான்! சிவபெருமான் ஒரு அழகான இளம் வயதான கோபி ஆனார். அவர் ஸ்ரீ கிருஷ்ணர் கோபியர்களுடன் நடத்திய ரஸ லீலா நடந்து கொண்டிருந்த இடத்தை அடைந்து சற்று தூரத்தில் மறைந்து நின்று ரஸ லீலாவைப் பார்க்க முயன்றார்.

“உடனடியாக ஸ்ரீ கிருஷ்ணரும் எல்லா கோபியர்களும் தங்கள் மன மகிழ்ச்சியில் பெரும் வித்தியாசத்தை உணர்ந்தனர். அவர்களால் மகிழ்ச்சியுடன் ஆட முடியாமல் அவர்கள் தங்களுக்குள்ளேயே, “ஏன் இன்று வழக்கம்போல் மகிழ்ச்சியே

*“ஸ்ரீ பிரஜ விலாஸ ஸ்தவா” என்ற நூலில் ஸ்ரீல ரகுநாத தாஸ கோஸ்வாமி பின்வரும் ஸ்தோத்திரத்தை எழுதியுள்ளார்:*

“முடா கோபேந்த்ர ஸியத்மஜா புஜ பரிஸ்ரங்ஹ நீதயே
ஸ்புரத் கோபிர்விருந்தைர் யம் இஹ பாகவதம் ப்ரணயிபிஹி
பஜத் பிஸ்தைர் பக்த்யாஸ் வமபிலசிதம் ப்ராப்தம் அசிராத்
யமித்திரே கோபீஸ்வரம் அனுதினம் தம்கில பஜே”.

*“யமுனா தீரத்தில் அமர்ந்திருக்கும் கோபீஸ்வர மகாதேவரை நான் தினமும் வழிபடுகிறேன். இதே கோபீஸ்வரரைத்தான் கோபியர்கள் மிகவும் ஆழ்ந்த பக்தியுடன் வழிபட்டு, நந்த மகாராஜாவின் குமாரனான ஸ்ரீ கிருஷ்ணரைத் தழுவும் பாக்கியமான அந்த விலை மதிப்பற்ற மாணிக்கத்தை அவர்கள் பெற்றார்கள்”.*

*மிகப் பெரும் வைஷ்ணவப் பெருமானாக விளங்கிய ஸ்ரீல சனாதன கோஸ்வாமி, ஒரு பழைய ‘மதன மோகன்’ கோயிலின் பக்கத்தில் வசித்து வந்தார். அவர் தினமும் கோபீஸ்வர மகாதேவரைத் தரிசிக்க அங்கிருந்து வெகு தூரம் நடந்து சென்று வழக்கமாக வழிபடுவார். பின்னர் சனாதன கோஸ்வாமி வயதானபோது, கோபீஸ்வர மகாதேவர் அவரது கனவில் தோன்றி, “நீ இந்த வயதான காலத்தில் இவ்வளவு சிரமம் கொண்டு என்னைப் பார்க்க வருகிறாயே. தயவு செய்து இதை இனி விட்டுவிடு”*

---

இல்லை?” என்று ஒருவருக்கொருவர் கேட்டுக் கொண்டு, காரணம் என்னவென்று கண்டுபிடிப்பதற்காக அக்கம் பக்கம் எல்லாம் தேடிப் பார்த்தார்கள். அப்போது அவர்கள் கோபியாக நின்று கொண்டிருந்த சிவபெருமானைக் கண்டு, ‘நீ யார்? உன் பெயர் என்ன? யார் உன் தாய் தந்தையர்கள்? உன் கணவனின் பெயர் என்ன? உன் மாமனார் வீடு எங்கேயுள்ளது?’ என்று அடுக்கடுக்காகக் கேள்விகளைக் கேட்டுத் துருவினர். கோபியாயிருந்த சிவபெருமான் பதில் எதுவுமே பேசாமலிருந்ததால், கோபியர்கள் அவரது கன்னத்தில் பலமாக அறைந்தனர். இவ்வாறு பல கோபியர்களும் மாறி மாறி அறைந்ததால் அவரது கன்னம் சிவந்து வீங்கியது. வலி தாங்க முடியாமல், “யோக மாயை! யோக மாயை! தயவு செய்து என்னைக் காப்பாற்று! நான் கிருஷ்ணரின் ரஸ லீலாவுக்கு இனி வரவே மாட்டேன்! பிருந்தாவனத்துக்கேகூட இனி வர மாட்டேன்’. என்று கதறினார். இதைக் கேட்டதும் பௌர்ணமாசி உடனே விரைந்து வந்து, கோபியர்களிடம், “இந்த கோபி (சிவபெருமான்)யிடம் நீங்கள் கருணை காட்டுங்கள். இவள் என் அன்பின் பாத்திரம்” என்று வேண்ட, பௌர்ணமாசியின் வேண்டுகோளின்படி கோபியர்கள் சிவபெருமானை ஒரு கோபியாகச் சேர்த்துக் கொண்டனர். ஸ்ரீ கிருஷ்ணர், கோபியாக நின்ற சிவபெருமானுக்கு ‘கோபீஸ்வரா’ அதாவது கோபியர்களால் ஆளப்படும் ஈஸ்வரர் என்று பெயர் வழங்கியது மட்டுமின்றி, ‘கோபீஸ்வரர்தான் ரஸ லீலாவின் காவலர்’ என்று அவருக்குப் பொறுப்பையும் அளித்து, ‘கோபீஸ்வரரின் அனுமதியின்றி எவரும் ரஸ லீலாவில் பங்கு கொள்ளவே முடியாது’ என்ற விதியையும் கூறினார்”.

(மூலம் : *Pinnacle of Devotion*)



*என்றார். ஆனால் சனாதன கோஸ்வாமியோ, “நான் உம்மைத் தரிசிக்க தினமும் நடந்து வந்தேதான் தீருவேன்” என்று உறுதியாகக் கூறினார். அதற்குக் கோபீஸ்வர மகாதேவர், “அப்படியானால், நான் உன் குடிசையின் பக்கத்தில் பங்கண்டி என்ற இடத்துக்கு வந்து விடுகிறேன்” என்று கூறி மறைந்தார். மறுநாளே அவர் கூறியதுபோல் பங்கண்டியில் மகாதேவர் தோன்றினார். சனாதன கோஸ்வாமியின் குடிசைக்கும் பழைய கோயிலுக்கும் இடையில், பாதி வழியில் பங்கண்டி இருந்தது. கோபீஸ்வர மகாதேவர் தனக்காக தன்னுடைய ஆலயத்தையே மாற்றியதைக் கண்டதும் சனாதன கோஸ்வாமியின் பக்திப் பூரிப்பிற்கு அளவில்லாமல் போனது! அன்றிலிருந்து அவர் பங்கண்டி மகாதேவரை தினமும் பார்க்கச் செல்வார்.*

*சனாதன கோஸ்வாமி எங்கேயிருந்தாலும், அவரது அன்புக்குரிய சிவபெருமானைப் பார்க்காமல் இருக்க மாட்டார். கோபீஸ்வர மகாதேவர் மற்றும் பிருந்தாவனத்தில் பங்கண்டி மகாதேவர், காமய வனத்தில் காமேஸ்வர மகாதேவர் - இப்படி ஏதாவது ஓர் இடத்திலுள்ள மகாதேவரை தினமும் தரிசிப்பார். அவர் கோவர்த்தன மலையின் பக்கம் வசிக்கும்போது அங்குள்ள சக்ரேஸ்வர மகாதேவரைத் தரிசித்தார். முன்னர் இந்திரன் கடும் புயல் மழையை பிரஜாவின் மேல் ஏவினபோது, இந்தச் சக்ரேஸ்வர மகாதேவர்தான் தன் திரிசூலத்தைச் சக்ராயுதம்போல் கொண்டு எதிர்த்து, பிரஜ ஜனங்களை இந்திரனின் கொடும் உக்கிரத்திலிருந்து காப்பாற்றினார்.*

*முன்னர் சிவபெருமான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் ஒரு வரம் கேட்டு வாங்கியிருந்தார். ஸ்ரீ கிருஷ்ணரின் குழந்தைப் பருவ லீலைகளில் தன்னையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே அந்த வரம். அதற்கு ஸ்ரீ கிருஷ்ணர், சிவபெருமானை நந்தகாவோன் என்ற இடத்தில் மலையாகத் தோன்றக் கூறினார். அதன்படி, சிவபெருமான் நந்தீஸ்வர மலையாக வடிவம் கொண்டு, நந்தீஸ்வரர் என்ற பெயரையும் பெற்றார். இதேபோல், பிரம்ம தேவர் ஸ்ரீமதி ராதிகாவின் பிறந்த இடமான ‘பர்ஸானா’ என்ற இடத்தில் பிரம்ம பர்வதமாகத் தோன்றினார். பிரம்ம தேவர் ஸ்ரீமதி ராதிகாவின் பிறப்பிடத்தின் அருகில் மலையாகத் தோன்றியதால் பிரம்மா நம் குருதேவராகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*சிவபெருமானை நாம் மிகவும் உயர்ந்தவராகவும், முதல் வைஷ்ணவராகவும், குருவாகவும் மதிக்கிறோம். ஆனால் அவரை நாம் தனியாக வழிபடுவதில்லை. நாம் சிவராத்திரி மற்றும் அவரது முக்கிய தினங்களைக் கடைப்பிடித்து அவருக்கும் ஸ்ரீ கிருஷ்ணருக்கும் இடையே யுள்ள நெருக்கமான உறவை நாம் பெருமை கொண்டாடுவோம். ‘ஹரி பக்தி விலாஸா’ என்ற நூலில் சனாதன கோஸ்வாமி, ஒவ்வொரு வைஷ்ணவரும் சிவசதுர்தஸி (சிவராத்திரி)யைக் கண்டிப்பாகக்*

கொண்டாட வேண்டும் என்று எழுதியுள்ளார். அனைத்துவிதமான நற்குணங்களும் நிறையப் பெற்றுள்ள சிவபெருமானை இந்த நாளில் மிகவும் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார்.

சிவராத்திரி தினத்தில், பின்வருமாறு சிவபெருமானைத் துதித்துப் போற்றுகிறோம்.

"பிருந்தாவன வனிபதே! ஜெய ஸோம ஸோம மௌலே
சனக்க சனந்தன சனாதன நாரதேத்ய
கோபீஸ்வரா! பிரஜ விலாஸி யுஹாங்க்ரி பத்மே
பிரேம பிரயச்ச நிருபாதி நமோ நமஸ் தே'

(சங்கல்ப கல்பத்ருமா - 103)

"ஓ, பிருந்தாவனத்தின் வாசலில் நின்று காப்பவரே! ஓ ஸோமா, உமக்கு வந்தனம்! சந்திரனைத் தலையில் சூடி, சனகா, சனந்தனா, சனாதான மற்றும் நாரதர் போன்ற மகா பெரும் முனிவர்கள் முதற் கொண்டு அனைத்து முனிவர்களும் வழிபடும் கோபீஸ்வரா! உமக்கு நான் என் பணிவான வந்தனங்களைச் செலுத்துகிறேன். பிரஜ மண்டலத்தில் அற்புத லீலைகளை நடத்தும் ஸ்ரீ ராத மாதவரின் பாதக் கமலங்களின் மேல் எனக்குப் பிரேம பக்தி உண்டாக தயைகூர்ந்து அருள்புரிவீராக! உமக்கு நான் திரும்பத் திரும்ப வந்தனம் செய்கிறேன்".

## சிவபெருமானின் வரங்கள்

முன்னர் காசி வாரணாசியில் ஏழைப் பிராமணர் ஒருவர் வசித்து வந்தார். அவர் சிவபெருமானை வழிபட்டு, "என் மகளைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும். ஆனால் என்னிடம் பணம் ஏதுமில்லை. தயைகூர்ந்து எனக்குச் செல்வம் தர வேண்டும்" என்று வேண்டினார். சிவபெருமான் அவரிடம் தோன்றி, "நீ பிருந்தாவனத்துக்குச் சென்று, அங்கே சனாதன கோஸ்வாமியைச் சந்திப்பாயாக. அவரிடம் நீ உன் மகளின் திருமணத்திற்கு வேண்டிய செல்வங்களைக் கேள்" என்று கூறினார். இதைக் கேட்டு பெருமகிழ்ச்சியடைந்த பிராமணர் பிருந்தாவனத்துக்குக் கால்நடையாகவே நடந்துவந்து அங்குள்ள கிராமவாசிகளிடம் சனாதன கோஸ்வாமியின் இருப்பிடத்தைப் பற்றி வினவினார். சானாதன கோஸ்வாமியைப் பற்றி அங்கே அறியாதவர்கள் யாரும் இல்லாததால் அனைவரும் அவரது குடிசை இருக்கும் இடத்தைக் கூறினர்.

அப்போது சனாதன கோஸ்வாமி யமுனா நதிக்கரையிலுள்ள காளிய ஹ்ரதா என்ற இடத்தில் பஜனை செய்து கொண்டிருந்தார். பயங்கரமான நஞ்சு நிறைந்த காளியா பாம்பு முன்னர் வசித்து வந்த இடம்தான் அது. மேலும், காளிய ஹ்ருதா யமுனா நதியின் பக்கம் இருந்ததால் அங்கே ஆற்றுமணல் நிறைய உண்டு. ஸ்ரீல சனாதன கோஸ்வாமியோ வெறும் கோவணத்துணி மட்டுமே அரையில் கட்டிக் கொண்டு பக்கத்திலுள்ள வீடுகளுக்குச் சென்று பிச்சை எடுத்துக் கொண்டு தினமும் ஒரே ஒரு சப்பாத்தியை, அதுவும் உப்பேயில்லாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.



சனாதன கோஸ்வாமியின் குடிசையை அடைந்து, "நான் சங்கர மகாதேவர் சிவபெருமானிடம் என் மகளின் கல்யாணத்தை முடிக்க வேண்டி பணம் கேட்டேன். அவர் தங்களைச் சந்தித்து வேண்டிய செல்வங்களைப் பெற்றுக்கொள்ளும்படி கூறினார்" என்று அந்த பிராமணர் விண்ணப்பித்தார்.

"என்னிடம் ஒன்றும் கிடையாது! நீதான் பார்க்கிறாயே. நான் கட்டியிருக்கும் அரைக் கோவணத்தைத் தவிர என்னிடம் எதுவுமே கிடையாது!" என்று சனாதன கோஸ்வாமி கையை விரித்தார்.

இவ்வாறு கூறிக்கொண்டே அவர் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினார். "ஓ, சிவ பெருமான் எனது மிக அன்பான நண்பர் ஆயிற்றே! அவர் பொய் சொல்லியிருக்கவே மாட்டார்..." அப்போதுதான் அவருக்கு ஞாபகம் வந்தது, அவரது உரைகல்லைப் (touchstone) பற்றி! உபயோகம் எதுவுமில்லை என்று அவர் யமுனா நதியினுள் எறிந்த அந்த உரைகல்! தொட்ட எந்த இரும்பையும் பொன்னாக ஆக்கும் அந்த உரைகல்!

சனாதன கோஸ்வாமி அந்தப் பிராமணரிடம், "நீ யமுனா நதிக்கரையில் நான் சொல்லும் இடத்தில் போய் மண்ணைத் தோண்டு. அங்கே ஓர் உரைகல்லை நீ காண்பாய். எனக்கும் சரியாக அந்த இடம் நினைவு இல்லை. முயற்சி பண்ணினால் கிடைக்கும்" என்றார்.

அவர் கூறிய இடத்தில் மண்ணைத் தோண்ட, அந்த உரைகல் பிராமணரின் கையில் கிடைத்தது. அளவில்லா மகிழ்ச்சியுடன் அவர் பக்கத்தில் கிடைத்த அனைத்து இரும்புகளையும் ஒவ்வொன்றாகத் தொட்டு அவற்றையெல்லாம் பொன்னாக்கினார். அவரது மகிழ்ச்சிக்கு எல்லையின்றி, குதித்துக்குதித்து ஆடினார்! "எனது பிரார்த்தனைக்கு சிவபெருமான் எவ்வளவு பெரிய பலனைக் கொடுத்திருக்கிறார்!" என ஆனந்தப்பட்டுக் கொண்டு, தம் வீட்டை நோக்கி நடந்தார். கொஞ்ச தூரம் அவர் நடந்திருப்பார், அவரது ஆசை பற்பல மடங்குகளாக அதிகரித்தது! "சனாதன கோஸ்வாமி ஏன் இரும்பையெல்லாம் பொன்னாக்கும் இந்த உரைகல்லை வேண்டாமென்று தூர எறிந்தார்? அதற்கு எப்படியும் காரணமிருக்கும். அவரிடம் இதை விடவும் மிக மிக விலை மதிப்புள்ள பொருட்கள் கண்டிப்பாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் யாரும் இதைத் தூர எறிய மாட்டார்கள்..." என்று எண்ணினார்.

இவ்வாறு நினைத்துக் கொண்டு, அந்த பிராமணர் சனாதன கோஸ்வாமியின் குடிசைக்குத் திரும்பவும் வந்தார்.

“நீ திரும்ப வந்த காரணமென்ன?” என்று சனாதன கோஸ்வாமி கேட்டார்.

“உம்மிடம், இதை விடவும் மிக மிக விலை மதிப்பான செல்வங்கள் உள்ளன என்பது எனக்கு இப்போது மிக நன்றாகப் புரிகிறது. எனக்கு அது வேண்டும்”.

“ஆம் என்னிடம் விலை மதிப்பற்ற பெரும் பொக்கிஷம் ஒன்று உள்ளது. உனக்கு அது வேண்டுமென்றால் நீ இந்த உரைகல்லை முதலில் யமுனா நதியினுள் எறிந்து விட்டு வா” என்றார் சனாதன கோஸ்வாமி.

பேராசை உந்த, மனத் தைரியத்துடன் அந்த உரைகல்லை யமுனா நதியினுள் எறிந்து விட்டு, சனாதன கோஸ்வாமியின் முன் அந்த பிராமணர் வந்து நின்றார்.

“இங்கே வா, இங்கே வா” என்று அந்த பிராமணரை அவர் உள்ளே அழைத்து அவருக்கு ஸ்ரீ ராதாகிருஷ்ணரின் மகா மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்தார்.

“ஹரே கிருஷ்ணா ஹரே கிருஷ்ணா
கிருஷ்ணா கிருஷ்ணா ஹரே ஹரே
ஹரே ராமா ஹரே ராமா
ராமா ராமா ஹரே ஹரே”.

இந்த மந்திரத்தை வழங்கியவுடன், “என்னிடம் பூலோக சம்பந்தமான பொக்கிஷங்கள் கிடையாது. ஆனால் அவை அனைத்தையும் வெறும் தூசி போலாக்கும் விண்ணுலக பொக்கிஷம் உள்ளது! விலை மதிப்பற்ற ராதா கிருஷ்ணா பக்தி உன்னிடம் சீக்கிரமே வரும்! எனவே நீ இனி இங்கேயே இரு. வேறு எங்கும் செல்லாதே. உன் மகளின் திருமணம் நன்றாக நடக்கும். நீ இங்கே உட்கார்ந்து இந்த மகா மந்திரத்தை உச்சரி” என்று உபதேசம் அளித்தார். அந்தப் பிராமணரும் மிக மகிழ்ந்து அங்கேயே இருந்து சனாதன கோஸ்வாமியின் உபதேசங்களை எப்போதும் கேட்டு மிக்க உன்னதமான பக்தரானார்.



## அத்தியாயம் - 2
# தானும் தன் பதவியும்

ஸ்ரீ நாரத முனிவர் சிவபெருமானின் புகழை எல்லோருக்கும் பறைசாற்ற மிகவும் ஆசை கொண்டார். அவர் சிவபெருமானை ஸ்ரீ கிருஷ்ணரின் உத்தம பக்தர் என்று கூற, அதை சிவபெருமான் ஏற்றுக்கொள்ளாமல் வருத்தப்பட்டதை முன்னர் பார்த்தோம். சிவபெருமான், தான் ஸ்ரீ கிருஷ்ணரின் நெருங்கிய அன்புக்குப் பாத்திரமானவரே அல்ல என்று விடாமல் மறுவிவாதம் செய்தார்.

மேலும் அவர் தன்னை ஸ்ரீ பிரகலாத மகாராஜாவுடன்* ஒப்பிட்டார். ஸ்ரீ நரசிம்ம பகவானின் புகழ் பெற்ற பக்தரான பிரகலாத மகாராஜாவைப்பற்றி ஸ்ரீமத் பாகவதத்தில் விரிவாக எழுதப் பட்டுள்ளது. சிவபெருமான் நாரதரிடம், “ஸ்ரீ பிரகலாத மகாராஜா என்னை விடவும் உயர்ந்த பக்தன்!” என்று கூறினார்.

---

* நாரதமுனிவரின் ஆஸ்ரமத்தில் ஸ்ரீமத் பாகவதத்தை பிரகலாதர் தன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே கேட்டார். அதனால், தன் பிறப்பிலிருந்தே இறைவனின் மேல் அளவில்லாத பக்தியுடன், வெறும் ஐந்து வயதாக இருக்கும்போதே தன் சக மாணவர்கள் அனைவருக்கும் இறையன்பை விளம்பினார். ஆனால், அவரது தந்தை முதல் எல்லா நாத்திகர்களும், அவருக்கு எதிராகவும், எத்தனையோ தடவை அவரைக் கொல்லவும் முயன்றனர். விஷத்தைக் கொடுத்தனர், கொதிக்கும் எண்ணெயில் எறிந்தனர், மலையுச்சியிலிருந்து எறிந்தனர் - இப்படி எத்தனை எத்தனையோ கொடுமைகளைச் செய்தனர். ஆனால் அவ்வளவு கடும் தண்டனைகளுக்குள்ளும் அவருக்கு விஷ்ணு பகவானிடம் உள்ள பக்தி கொஞ்சம்கூடக் குறையவேயில்லை. மாறாக, அவரது பக்தி மென்மேலும் பெருகியது. இடைவிடாமல் பகவானைத் துதித்துக் கொண்டே இருந்தார். கடைசியில், பகவானே அரை மனிதனும், அரை சிங்கமும் கொண்ட உருவத்தில் ஸ்ரீ நரசிம்ம பகவானாகத் தோன்றி, பிரகலாதனின் அசுரத் தந்தையைக் கொன்றார். ஸ்ரீ நரசிம்ம பகவான் தன்னிடம் வரங்கள் கேட்க வேண்டிய போதும்கூட, தனக்காக எதுவும் கேட்காமல், தன் தந்தைக்கும் மற்ற எல்லா ஜீவன்களுக்கும் முக்தியை அளிக்குமாறு வேண்டிக் கொண்டார். சுத்த பக்தர்களால் மிகவும் பாடிப் புகழப்படுபவர் ஸ்ரீ பிரகலாத மகாராஜா!

உண்மையிலேயே சிவபெருமான் பிரகலாத மகாராஜாவைவிட எவ்வளவோ பெரியவர். ஆனால் ஏன் அவர் நாரதரிடம் இவ்வாறு கூற வேண்டும்? பிரகலாத மகாராஜாவின் மேன்மையான பக்தியையும் அவரது குணங்கள் மற்றும் அறிவுரைகளையும் எல்லோரும் ஆர்வமுடன் கேட்டுப் பின்பற்ற வேண்டும் என்பதே அதன் காரணம்.

உண்மையென்னவென்றால், பிரகலாத மகாராஜாவினால் ஸ்ரீ கிருஷ்ணரின் உத்தம இடமான பிருந்தாவனத்துக்குச் செல்ல முடியாது. ஆனால் சிவபெருமானோ கோபீஸ்வர மகாதேவராக அங்கே நிரந்தரமாக உறைந்துள்ளார். அதுமட்டுமல்லாமல், ஸ்ரீ கிருஷ்ணருக்கு அவர் நேரடியாக நிறைய சேவைகளைப் புரிகிறார். அவரும் அவரது துணைவியான பார்வதி தேவியும் அந்தரங்கமாக ஸ்ரீ கிருஷ்ணரின் 'அஷ்ட காலிய லீலை'களில் எப்போதும் தியானம் செய்கின்றனர். இந்த எட்டுவிதமான நித்திய லீலைகள் மிகவும் அந்தரங்கமும் இரகசியங்களும் நிறைந்தவை. இருப்பினும், சிவபெருமானாலும் பார்வதி தேவியினாலும் அவற்றைத் தொடர்ந்து தியானம் செய்ய முடிகிறது. ஸ்ரீ பிரகலாத மகாராஜாவைவிட சிவபெருமான் இலட்சக்கணக்கான மடங்கு உயர்ந்தவர்.

பின் ஏன் அவர் தன்னை பிரகலாத மகாராஜாவை விட குறைவாகக் கூற வேண்டும்? உண்மையென்னவென்றால், ஒரு வகையில் பிரகலாத மகராஜா, சிவபெருமானைவிட உயர்ந்தவர், இன்னொரு வகையில் அப்படியல்ல!

இதை எப்படி ஒப்பேற்றுவது (reconcile) என்பதை இனி பார்ப்போம். சிவபெருமானை இரண்டு விதங்களாக நாம் பார்க்கலாம். ஒன்று, அவரது பதவி மூலமாக. இன்னொன்று, தனிப்பட்டவராக. அவரது தனிப்பட்ட உருவத்தில் அவரை ஸ்ரீ கிருஷ்ணரின் நெருங்கிய பக்தராக - கோபீஸ்வரர், ஹனுமான், பீமன் - இவ்வாறு காண்கிறோம். பிருந்தாவனத்தில் அவர் கோபீஸ்வரராக உள்ளார். ஹனுமானாக ஸ்ரீ ராமச்சந்திர பகவானுக்கு நெருங்கிய சேவை செய்கிறார். பீமனாகத் தோன்றி ஸ்ரீ கிருஷ்ணருக்குச் சேவை செய்கிறார். மேலும், அவர் ஹனுமானும் பீமனும் சேர்ந்த ஒன்றாக மத்வாச்சாரியாராகத் தோன்றினார் (இந்தக் கலியுகத்தில் தோன்றிய மத்வாச்சாரியார் நம் குரு*.)

* கௌடிய சம்பிரதாயத்திலுள்ள அனைத்து பக்தர்களுக்கும் மத்வாச்சாரியார்தான் மூல ஆச்சாரியார். "இந்த மத்வ-கௌடிய சம்பிரதாயம் பிரம்ம-சம்பிரதாயம் என்றும் அழைக்கப்படுகிறது. ஏனென்றால் இந்த சம்பிரதாயம் பிரம்மாவிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. பிரம்ம தேவர் நாரத முனிவருக்கு உபதேசம் அருளினார். நாரத முனிவர் வேத வியாஸ தேவருக்கு உபதேசித்தார். வேத வியாஸர் மாதவ முனி என்ற மத்வாச்சாரியாருக்கு உபதேசித்தார்." (மூலம் கிருஷ்ணா - முகவுரை)



இனி சிவபெருமானை அவரது பதவி மூலமாகப் பார்க்கும்போது அவரை நாம் அழிக்கும் தொழிலை நடத்தும் கடவுளாகக் காண்கிறோம். இதேபோல் பிரம்ம தேவரை நாம் படைக்கும் கடவுளாகக் காண்கிறோம். எனவே சிவன், பிரம்மா அனைத்தும் உண்மையில் வெறும் பதவிகளே. பிரம்மாவும் சிவனும் சாதாரண ஜீவாத்மாக்கள் அல்ல. அவர்கள் ஒரு நாட்டை ஆளும் முதன்மந்திரி போன்று. ஆனால் மிகப்பெரும் பொறுப்பான பதவிகளை பிரம்மாண்ட அளவில் ஏற்றவர்கள். இந்தப் பொறுப்புக்களை யார் ஏற்றாலும் அவற்றைச் செவ்வனே செய்ய வேண்டியது அவர்களுடைய முழுப் பொறுப்பாகும்.

பிரம்மாவையும் சிவனையும் அவர்களுடைய பொறுப்பு வாயிலாகக் காணும்போது, சிவபெருமான் பிரம்மாவைவிட மிக மேலானவர். விஷ்ணு பகவானின் ஒரு அம்சமே சிவனாகும். ஆனால் சில சமயங்களில் மிக மிக உயர்ந்த நிலையை அடையும் ஜீவாத்மா, சிவனின் அம்சமான ருத்ரராக மாற முடியும். சாஸ்திரப்படி ஒரு ஜீவாத்மா தன் வர்ணாஸ்ரம தர்மங்களை நிலை மாறாமல் நூறு பிறவிகளில் கடைப்பிடித்தால், அந்த ஜீவாத்மா பிரம்மாவாக மாற வாய்ப்பு உண்டு*. அதாவது அந்த ஜீவாத்மா, பிரம்மாவின் அளவுக்குத் தகுதி பெறுகிறது. இப்படி பிரம்மா ஆன ஜீவன், தன் தொழிலை செவ்வனமாக தன் நூறு பிரம்ம பிறப்புகளிலும் செய்தால், அதன் அடுத்த பிறப்பில் சிவபெருமானின் அம்சமான ருத்ராவாக மாறி சிவபெருமானின் தொழிலில் பங்கு கொள்ளலாம். எனவே சிவபெருமானின் பதவி பிரம்மாவின் பதவியைவிட மிக மிக உயர்ந்தது.

* வேதம் கூறுகிறது : "ஸ்வ தர்ம - நிஸ்தஹ சத ஜன்மபி புமான் விரிஞ்சதாம் எதி" - எவரொருவர் தன் வர்ணாஸ்ர தர்மங்களை தவறில்லாமல் நூறு பிறவிகளில் பண்ணுகிறார்களோ, அந்த ஜீவனுக்கு பிரம்மாவின் பதவி கிடைக்கிறது. (ஸ்ரீ மத் பாகவதம் 5.20.33 விரிவுரை).

வர்ணாஸ்ர தர்மம் என்பது, தான் எந்தச் சமுதாய வகுப்பில் தோன்றினாலும் அந்த வகுப்புக்கு விதித்த கடமையை சரியாகச் செய்வதேயாகும்.

# அழிக்கும் தொழில்

சிவபெருமான் எடுத்துக் கொண்ட பொறுப்பான தொழில் என்ன? ஏன் அவரது தொழில் பிரம்ம தேவரின் படைப்புத் தொழிலைவிட சிறந்தது? ஒரு காரணம் என்னவென்றால், பிரம்மாவினால் பிரளயத்தை உண்டு பண்ண முடியாது. பிரளயம் என்பது, அண்ட சராசரங்களும் அழிக்கப்படுதல். இது ஒரு மிகப் பயங்கரமான தொழில். சிவபெருமான் இதை இலகுவாக செய்துவிடுகிறார்.

அவரது தொழிலை ஒரு விவசாயிக்கு ஒப்பிடலாம். விவசாயி பெரிய நிலங்களில் கோதுமை போன்ற விதைகளை விதைத்து, அவற்றைக் கண்ணும் கருத்துமாகப் பேணி, தண்ணீரும் உரமும் கொடுத்து, அவற்றிற்குச் சேதம் பண்ணும் மிருகங்கள் போன்றவைகளிடமிருந்து காத்து, செவ்வனே வளர்க்கிறான். அவை சுமார் ஆறு மாதங்களில் விளைச்சல் கொடுக்கிறது. அவற்றைப் பின்னர் கையாலோ அல்லது இயந்திரங்களைக் கொண்டோ அறுவடை செய்கிறான். தானியங்களை அதன் பயிர்களிலிருந்து பிரித்து எடுக்கிறான். மீதி இருக்கும் சக்கைகளையும் கழிவுகளையும் கூட்டி அவற்றை தீயினால் எரிக்கிறான். இல்லாவிடில் அதில் வேண்டாத பாம்பு, தேள், ஜந்துக்கள் மற்றும் அழுக்கும் பிடித்துவிடும்.

இப்படி ஒரு விவசாயி எவ்வாறு தானியங்களைப் பிரித்து அறுவடை செய்கிறானோ, அதேபோல் சிவபெருமான், நித்தியமான அனைத்து ஜீவாத்மாக்களையும் அவர்களின் உடலிலிருந்து பிரித்து எடுத்துவிட்டு பூத உலகங்களை அழிக்கிறார். அவர் உண்டுபண்ணும் கோரத் தீயில் அண்ட சராசரங்கள் அழிந்து பின்னர் அவை அடுத்த சிருஷ்டிக்கு ஆயத்தப்படுத்தப்படுகின்றன.

மொத்தம் இரண்டு வகையான பிரளயங்கள் உள்ளன. ஒன்று பிரம்ம தேவரின் இரவுக்காலம், இன்னொன்று அவர் இறக்கும் போது. பிரம்மாவின் ஒரு நாள் பகல் வேளை நம் பூவுலக கணக்குப்படி 432 கோடி வருடங்கள். இதேபோல் அவரது இரவும் 432 கோடி வருடங்கள். அவர் தன் ஒவ்வொரு நாளும் இரவில் ஓய்வெடுக்கும்போது தன் விநோதமான தூக்கத்தில் கர்போதகசாயி விஷ்ணுவிடம் ஐக்கியமாகிறார். அப்போது அவரது பிரம்மாண்டம் அழிக்கப்பட்டு, முக்தியடையாத அனைத்து ஜீவாத்மாக்களும் அவருடன் கர்போதகசாயி விஷ்ணுவிடம் தங்குகின்றன*.

* “பிரம்மதேவரின் பகல் ஆரம்பிக்கும்போது எல்லா உயிர்களும் தோன்றா நிலையிலிருந்து தோன்றிய நிலைக்கு மாறுகின்றன. பின்னர் பிரம்மாவின் இரவு வரும்போது அவை அனைத்தும் திரும்பவும் தோன்றா நிலைக்குச் செல்கின்றன. பிரம்மாவின் பகலில், இவ்வாறு திரும்பத்திரும்ப பிறந்து இறந்து வரும் ஜீவாத்மாக்கள், பிரம்மாவின் இரவு வரும்போது பரிதாபமாக அழிக்கப்படுகின்றன”. (பகவத் கீதை : 8.18-19)



இவ்வாறு சிவபிரானால் அழிக்கப்பட்டு, பின்னர் நீரில் பிரம்மாண்டங்கள் மூழ்கியிருக்கும்போது ஜீவாத்மாக்கள் தத்தம் சூஷ்ம சரீரங்களுடன் (subtle body) கர்போதகசாயி விஷ்ணுவின் ஆன்மீக உடலில் தங்கி ஓய்வெடுக்கின்றன. அவை பிரம்மாவின் அடுத்த நாளுக்காகக் காத்துக் கொண்டிருக்கும். பிரம்மா, தன் தூக்கத்திலிருந்து விழித்து, மறுபடியும் படைத்தல் தொழிலை ஆரம்பிக்கும்போது, இந்த ஜீவாத்மாக்கள் அனைத்தும் திரும்பவும் பிறவி செய்யப்படுகின்றன. அவற்றில் சில ஜீவாத்மாக்கள் முக்தியடையும், மற்றவை திரும்பத் திரும்ப பிறந்து இறந்து அடுத்த பிரளயத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும்!

ஆனால் பிரம்ம தேவர் அவரது நூறு வருட காலம் முடியும்போது, சிவபெருமான் தனது அழிக்கும் தொழிலை இன்னமும் பெரிய அளவில் புரிகிறார். அப்போது ஜீவாத்மாக்கள் காரணோதகசாயி விஷ்ணு, அதாவது மகா விஷ்ணுவின் உடலில் நுழைகின்றன. பிரம்மாவின் இரவில் ஜீவாத்மாக்கள் கர்போதகசாயி விஷ்ணுவிடம் நுழைந்தன. ஆனால் பிரம்ம தேவரே இறக்கும் போது அவை மகாவிஷ்ணுவிடம் நுழைகின்றன. அது மட்டுமல்லாமல் கர்போதகசாயி விஷ்ணுவும் மகா விஷ்ணுவிடம் கலந்துவிடுகிறார். மேலும் இதேபோல் ஒவ்வொரு பிரம்மாண்டத்திலும் அதன் பிரம்மதேவர் இறக்கும்போது அந்தந்த பிரம்மாண்டத்திலுள்ள கர்போதகசாயி விஷ்ணுக்களும் மகாவிஷ்ணுவுடன் கலக்கிறார்கள். இவ்வாறு கோடிக்கணக்கான அளவிட முடியாத கர்போதகசாயி

“பகல் முடியும்போது, தாமஸ குணத்தின் உந்தலால் மிக சக்தியுடன் படைத்த பிரம்மாண்டம் குத்திருட்டில் மூழ்குகின்றது. அப்போது, காலத்தினுள் கட்டுண்ட எண்ணிலடங்கா ஜீவன்கள் அந்தப் பிரளயத்தில் நிர்மயமாகி, எல்லாம் பேரமைதி ஆகிவிடுகின்றன”. (ஸ்ரீமத் பாகவதம் 3.11.28)

“பிரளயத்தின்போது ருத்ரர் மூன்று உலகங்களையும் காலமான தீயினால் எரிக்கிறார். அப்போது பூ, புவா, ஸ்வா (பாதாள, மத்ய, சுவர்க்க) அனைத்து உலகங்களும் அழிக்கப்படுகின்றன. சங்கரரின் வாயினின்று கிளம்பும் தீ, நூறு தேவலோக வருடங்கள் (36,000 பூலோக வருடங்கள்) தொடர்ந்து எரிகின்றது. பின்னர் இன்னும் இதேபோல் நூறு வருடங்களாக தொடர்ந்து மழை பெய்து எல்லா சமுத்திரங்களும் பொங்குகின்றன”. (ஸ்ரீமத் பாகவதம் 3.11.28, 3.11.31 விரிவுரைகள்).

விஷ்ணுக்கள், காரணோதகசாயி விஷ்ணு*(மகாவிஷ்ணு)வினுள் நுழைகின்றனர். மகாவிஷ்ணு திரும்பவும் சிருஷ்டியை ஆரம்பிக்கும் சமயம், எண்ணிலடங்காத அளவில் கர்போதகசாயி விஷ்ணுக்களை அவர் மீண்டும் உண்டு பண்ணுகிறார். இதேபோல் முழு பிரளயத்தின் போது எல்லா கர்போதகசாயி விஷ்ணுக்களும் அவரது உடலில் திரும்ப வந்து ஐக்கியமாகி விடுகிறார்கள். (ஒவ்வொரு கர்போதகசாயி விஷ்ணுவிடமிருந்தும் ஒரு பிரம்மா தோன்றுகிறார்.)

பிரம்மாவைப் போன்று சிவபெருமான் ஜீவாத்மா அல்ல. அதே சமயம் ஒருவகையில் அவர் விஷ்ணு பகவானுமல்ல. அவர் எல்லா ஜீவாத்மாக்களைவிடவும் மிக மிக சக்தி வாய்ந்தவர் மட்டுமல்லாமல் பிரம்மாவையும் விட மிக மேலானவர். ஆனால் அவர் விஷ்ணுவுக்கு சரி நிகரானவருமல்ல. அவரது மிக உயர்ந்த ஸ்தானத்தினால் அவர் முக்காலங்களையும் (கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம்) அறிந்தவர். அவரது ஒரு கண் சூரியனைப் போலவும், இன்னொரு கண் சந்திரனைப் போலவுமாகும். மேலும் அவரது நெற்றிப் புருவத்தில் இன்னொரு கண் உள்ளது. மூன்றாவது கண்ணான இந்த நெற்றிக் கண்ணிலிருந்தே அவர் பிரளய காலத்தீயை உண்டு பண்ணுகிறார்.

சிவபெருமானை, அவரது அழிக்கும் தொழில்வாரியாகப் பார்த்தால், அவர் ஸ்ரீ கிருஷ்ணருக்கு நேரடியாக சேவை செய்வதாகத் தெரியாது. ஏனென்றால் அவர் தன் தொழிலைத்தான் செய்து கொண்டிருக்கிறார். ஆனால் ஸ்ரீ கிருஷ்ணரின் பக்தர்களோ, லட்சக்கணக்கான பிறவிகளுக்குப் பின் முக்தி பெற்று, பிரம்மா, சிவன் இவர்களுடைய பதவிகளையும்கூட உதறி எறிந்துவிட்டு, எப்போதும் ஸ்ரீ கிருஷ்ணரின் பெயரையும் புகழ்களையும் பாடிக் கொண்டு, பூவுலகத்தில் பிரகலாத மகாராஜா போன்ற சுத்த பக்தர்களாகப் பிறக்கின்றனர். இதையே சிவபெருமான் நாரதரிடம் கூறிக் கொண்டிருந்தார்.

பிரகலாத மகாராஜாவுக்கு இந்தப் பூவுலகத்தைப் பற்றிய தொடர்பு எதுவுமே கிடையாது. அவருக்குப் படைப்புத் தொழிலோ, அழிக்கும் தொழிலோ எதுவுமே கிடையாது. அவற்றையெல்லாம் துச்சமாக மதித்து உதறி எறிந்துவிட்டார். அவர் முன்பு அரசனாக ஆண்ட போதும் அவர் பெயரளவில் மட்டும்தான் அரசனாக இருந்தாரே தவிர,

* “பரம இறைவனின் (ஸ்ரீ கிருஷ்ணர்) முதல் புருஷ அவதாரம் காரணோதகசாயி விஷ்ணு. அவர் காலம், இடம், காரணம், செயல், மனம், ஜடம், அகங்காரம், குணங்கள், இந்திரியங்கள், பூத ரூபங்கள், கர்போதகசாயி விஷ்ணு மற்றும் அனைத்து ஜீவராசிகள் இவை எல்லாவற்றையும் ஆள்பவர்.”

(ஸ்ரீமத் பாகவதம் 2.6.42)



உண்மையில் அவரது மந்திரிகளிடம் பொறுப்பெல்லாவற்றையும் விட்டிருந்தார். அவரது எல்லா இந்திரியங்களும் முழுமையாக பரம இறைவனை நினைப்பதிலும் சேவை செய்வதில் மட்டுமே ஈடுபட்டிருந்தன. இறைவனைப்பற்றி அறிவதிலும், அவரது நாமங்களைக் கேட்பதிலும், அவரது புகழ்களைத் துதித்துப் பாடுவதிலும், தியானம் செய்வதிலும், அவரது கட்டளையை மேற்கொள்ளுவதிலும் இப்படியே முழு நாட்களையும் கழித்தார்.

சொல்லப்போனால் பிரகலாதனைப் போன்ற சுத்த பக்தர்கள், ஸ்ரீ கிருஷ்ணரின் அம்சங்களான ஸ்ரீ நரசிம்ம பகாவனையோ, ஸ்ரீ ராம பகவானையோ வழிபடக்கூடத் தேவையில்லை! அவர்களுக்கு ஸ்ரீ கிருஷ்ணர் தானே நேரடியாக வந்து தரிசனம் அளிப்பார். சிவபெருமான், தான் எப்போதும் பிரம்மாண்டங்களை ஆண்டு, அழிக்கும் தொழிலைப் புரிந்து வருவதால் பிரகலாதரைப் போல் எப்போதும் இடைவிடாமல் அவரால் ஸ்ரீ கிருஷ்ணருக்கு நேரடி சேவையோ, தரிசனமோ செய்ய முடிவதில்லை.

பிரம்மாவும் சிவபெருமானும் உண்மையில் பிரகலாத மகாராஜாவைவிட பக்தியில் உயர்ந்திருந்தும், அவர்களது பதவியினால் நேரடியாக ஸ்ரீ கிருஷ்ணருக்குப் பாத சேவைகளைச் செய்ய இயலாதவர்களாக இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்களுடைய பொறுப்பான பதவிகளினால் அவர்கள் சத்வ, ரஜஸ், தாமஸ என்ற முக்குணங்களைத் தொட்டுக் கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது. பிரம்ம தேவரின் படைப்புத் தொழில் முழுக்கவும் ரஜோ குணத்தாலானது. சிவபெருமானின் அழிக்கும் தொழிலோ தாமஸ குணத்தைச் சார்ந்தது. இந்தக் காரணங்களால்தான் அவர்கள் ‘குண அவதாரங்கள்’ என்று பிரிக்கப்பட்டு பூதவுலக சம்பந்தமான முக்குணங்களுடன் காணப்படுகின்றனர்.

ஆனால் பிரகலாத மகாராஜாவோ எல்லாக் குணங்களையும் தாண்டியவர் - அதாவது “நிர்குணா”. அவருக்கும் சத்வ, ரஜஸ், தாமஸ குணங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. இந்த முக்குணங்களால்தான் எல்லாப் பூவுல பிரம்மாண்டங்களும் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. உண்மையிலேயே சிவபெருமான் முக்குணங்களையும் கடந்தவர். ஆனால் அழிக்கும் தொழிலை செவ்வனே செய்ய வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக அவர் தாமஸ குணத்தைக் கொண்டுள்ளார். இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம்.

# நேரடித் தொண்டர்

இனி, சிவபெருமான் பிரகலாத மகாராஜாவைப் புகழ்ந்த அதே காரணத்தை, நாம் சிவபெருமானை, அவரது பதவியை நீக்கி அவரது தனிப்பட்ட உயரிய ஸ்தானம் வழியாகப் பார்ப்போம்.

சில சமயம் முதிர்ந்த பக்தர் ஆரம்ப பக்தனிடம், அவனது பக்தி வளர வேண்டும் என்பதற்காக, "ஓ, நீ எவ்வளவு சிரமப்பட்டு பணம் சம்பாதித்து எங்களைப் போன்றவர்களை எல்லாம் நன்றாகக் கவனிக்கிறாய். என்னிடம் எதுவுமே கிடையாது. நான் இங்கு வெறுமனே வந்து உன் செலவில் உண்டு, தங்கியும் இருக்கிறேன். உன் உதவியும் திறமையும் இல்லாமல் இந்த விழாவை நடத்தியிருக்கவே முடியாது. நீ என்னை விட மிக மிக உயர்ந்தவன்" என்று புகழ்வது வழக்கம்.

இது, தன்னடக்க மனப்பான்மையுடன் அன்புக்காகவும் ஆதரவுக்காகவும் கூறப்படுவது. ஆனால் அதே சமயம் அவர், தான் இறைவனின் நேரடி பராமரிப்பில் இருப்பதாகவே தன் உள்மனதில் நினைத்துக் கொள்வார். அந்த முதிர்ந்த பக்தருக்கு தன் இளம் பக்தன் முன்னேற வேண்டும் என்பதில்தான் முழு எண்ணம்.

ஆனால் இங்கே, சிவபெருமான் பிரகலாத மகாராஜாவின் நன்மைக்காக இதைக் கூறவில்லை. மாறாக, பக்தர்களை ஊக்குவித்து, பக்தியில் அவர்களை மென்மேலும் உயர வைக்க வேண்டுமென்பதே அவர் எண்ணம். அவரது ஆழ்ந்த உள் எண்ணம் என்ன? நாரதமுனிவர் மற்றும் சனாதன கோஸ்வாமி போன்றவர்களின் பரம இலட்சியங்களுக்கு உதவி செய்து, பக்தியின் வெவ்வேறு படிநிலைகளை உலகுக்கு உணர்த்துவதேயாகும். இவ்வாறு பக்தியின் கீழ் நிலையிலிருந்து, படிப்படியாக மேலே சென்று இறுதியில் பக்தியின் உச்சநிலையில் நிற்கும் கோபியர்களின் புகழை உலகெங்கும் அறிவிப்பதே அவரது நோக்கம். இந்த உண்மையை நன்றாக ஆழ்ந்து அறிந்து கொள்வது மிக முக்கியம். இதை அறிந்தால் மட்டுமே பக்தியில் முன்னேற முடியும்!

ஆயிரக்கணக்கான வித்தியாசமான பொருட்கள் நிறைந்த ஒரு கடைச்சந்தையில் நீ நிற்கிறாய் என்று வைத்துக் கொள்வோம். சில கடைகளில் இரும்பினால் செய்த பொருட்கள் உள்ளன. சிலவற்றில் பொன்னால் செய்த பொருட்கள் உள்ளன. இன்னொன்றில் மாணிக்கக் கற்கள் வைக்கப்பட்டுள்ளன. மேலும் இன்னொன்றில் சிந்தாமணி (கேட்டதை வழங்கும் கல்ப மணி)கள் வைக்கப்பட்டுள்ளன. ஒரு நிபுணன் உன்னிடம் ஒவ்வொரு கடையிலுமுள்ள பொருட்களை விவரித்துக் கொண்டே வருகிறான் என்று வைத்துக் கொள்வோம். ஒரு கிலோ தங்கத்துடன் ஆயிரம் கிலோ இரும்பைக் கூட ஒப்பிட முடியாது.



அதேபோல், பெருமளவு தங்கம் இருந்தாலும் அதை ஒரு கௌஸ்துப மணி அல்லது அதைப் போன்ற ஒரு மாணிக்கக் கல்லுடன் ஒப்பிட முடியாது. அதேபோல், கோடிக்கணக்கான மாணிக்கக் கற்கள் ஒரே ஒரு சிந்தாமணிக் கல்லுக்கு நிகராகாது. ஆனால் ஸ்ரீ கிருஷ்ணரின் நாமத்தை எத்தனை கோடி சிந்தாமணிக் கற்களுடனும்கூட ஒப்பிட இயலாது!

இனி, ஒரு பக்தனை எடுத்துக் கொள்வோம். அவன் கிருஷ்ண பகவானின் நாமத்தை "கிருஷ்ணா" என்று உச்சரித்துக் கொண்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். ஆனால் இன்னொரு பக்தனோ 'ராதா-ரமணா' என்று உச்சரித்துக் கொண்டிருக்கிறான் என்று கொள்வோம். "ராதா-ரமணா" என்றால் ஸ்ரீமதி ராதா ராணியுடன் லீலைகள் புரியும் கிருஷ்ணர் என்று அர்த்தம். இப்படி உச்சரிப்பவனின் பக்தி ரசம் மிக மிக உயர்ந்தது. வெறும் கிருஷ்ண நாமத்தை உச்சரிக்கும் பக்தனைவிட எத்தனையோ மடங்கு அதிகமான பரம இன்பத்தை இரண்டாவது பக்தன் பெறுகிறான்.

நாம் முன்பு கண்ட கடைச்சந்தை உதாரணத்தில் அந்த நிபுணன் உன்னிடம், "இந்தக் கடை நல்லது, அந்தக்கடை இதை விடவும் சிறந்தது, ஆனால் அதோ அங்கே உள்ளதே அது மிக மிகச் சிறந்தது" என்று கூறுவான். இதேபோல்தான் ஸ்ரீல சனாதன கோஸ்வாமி, விதவிதமான பக்தர்களை அவர்களுடைய பக்தியின் நிலையைப் பொறுத்து தரம் தரமாகப் பிரித்து ஸ்ரீபிர்கத் பாகவதாம் ருதாவில் எழுதினார்.

நாரத முனிவர் இவ்வாறு சிவபெருமானின் உறைவிடத்துக்கு வருகைதந்து அவரைப் புகழ்ந்து பாடிய சரித்திரத்தையும், ஸ்ரீ பிர்கத் பாகவதாம் ருதாவில் ஸ்ரீல சனாதன கோஸ்வாமி எழுதியுள்ளார். ஸ்ரீல சனாதன கோஸ்வாமியைப் போல் நாரத முனிவரும் மகா திறமை படைத்தவர். அவர் இந்த உலகத்தில் சுத்த பக்தி தோன்ற மிகவும் அக்கறையுள்ளவர். எனவேதான் அவர் ஸ்ரீ கிருஷ்ணரின் மிக உத்தம பக்தனைத் தேடுவதுபோல் ஒரு கபட நாடகத்தை நடத்தினார். நாரத முனிவரின் முதல் தேடல்தான் பிரயாகாவில் வசித்த ஒரு பிராமணன். அதன்பின் அவர் தென்னிந்தியாவிலுள்ள அரசர் ஒருவரைச் சந்தித்தார். அடுத்து அவர் இந்திரலோகம் சென்று இந்திரனைச் சந்தித்தார். இந்திரனோ அவரை பிரம்ம தேவரிடம் அனுப்பி வைத்தான். பிரம்ம தேவரோ நாரதமுனிவரை சிவபெருமானிடம் அனுப்பி வைத்தார். ஆனால் இப்போது சிவபெருமானோ, அவரை பிரகலாத மகாராஜாவிடம் அனுப்பி வைக்கிறார். இப்படி ஒன்றன்பின் ஒன்றாக பக்தியின் அடுத்தடுத்த படிநிலைகளுக்குச் சென்று கடைசியாக ஸ்ரீகிருஷ்ணரிடம் உச்சநிலையான பிரேம பக்தி கொண்ட கோபியர் களிடம் கொண்டு முடிக்கிறார். பரமசிவன், தன் கோபிஸ்வரரின் ரூபத்தில் ஸ்ரீ கிருஷ்ணருக்கு மிகவும் நெருங்கிய பக்தராகவும் கோபியர்களின் குழுவினராகவும் விளங்குகிறார்.

## அத்தியாயம் - 3
## மூன்று விசாரங்கள்

ஸ்ரீ கிருஷ்ணருக்கும் சிவபெருமானுக்கும் உள்ள சம்பந்தத்தை மூன்று விசாரங்களாக ஆராய்ந்து அறிந்து கொள்ளலாம்.

1) தத்வ கத விசாரம் - அதாவது தத்துவ ரீதியாக விசாரணை செய்து அறிதல்.

2) ஐஸ்வரிய கத விசாரம் - அதாவது அவர்களுடைய மகிமைகளின் *(majesty)* மூலமாக அறிதல்

3) நரவத் கத விசாரம் - அவர்களின் மானிட ரூப அவதாரங்களின் லீலைகள் வழியாக அறிதல்.

தத்துவ ரீதியாகப் பார்க்கும்போது ஸ்ரீ கிருஷ்ணரின் ஒரு அம்சமே சதாசிவன். அந்த மூல சதாசிவனின் ஓர் அம்சமே சிவன். ஸ்ரீ கிருஷ்ணரின் மகிமைகள் வழியாகவோ, அவரது மகத்தான லீலைகளின் வழியாகவோ பார்க்கும்போது, ஸ்ரீ கிருஷ்ணர் சிவபெருமானின் மிக மதிப்புக்கும் பேரன்புக்கும் உடையவராவார். அதாவது சிவபெருமான் ஸ்ரீ கிருஷ்ணரை வழிபடுகிறார். ஆனால் நரவத் கத விசாரம் வழியாகப் பார்த்தால் ஸ்ரீகிருஷ்ணர் மனிதரைப் போன்ற வடிவில் வேறுவிதமான பாத்திரங்களை ஏற்று அவரது லீலைகளின் போது நடிக்கிறார். உதாரணமாக, அவர் தன்னால் எதையும் செய்ய இயலாத பச்சிளம் குழந்தையாய்த் தோன்றி, தாய் யசோதாவே அவருக்குப் பாலூட்டவும், மற்றும் எல்லாத் தேவைகளையும் கவனிக்க வேண்டியபடி அவர் மானிட ரூபத்தில் லீலைகளை நிகழ்த்துகிறார். அப்போது சிவபெருமான் அங்கே தோன்றி ஸ்ரீ கிருஷ்ணருக்கு ஆசீர்வாதங்கள் அளிப்பார். மேலும், புராணங்களில், ஸ்ரீ கிருஷ்ணர் துவாரகாவிலிருக்கும்போது அவரது ஒரு ராணியான ஜாம்பவதிக்குக் குழந்தை வேண்டுமென்று அவர் சிவபெருமானை வழிபட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. ஸ்ரீ கிருஷ்ணர் தன்னை வழிபட்டபோதும் சிவபெருமான் ஒருபோதும்



தன்னை ஸ்ரீ கிருஷ்ணரைவிட உயர்ந்தவராகக் கருதியதேயில்லை. எப்போதும் அவர் ஸ்ரீ கிருஷ்ணரே பரம இறைவன் என்றும், தான் அவரது சேவகன் என்றே எண்ணினார்.

இந்த மூன்று விசாரங்களையும் ஒருவர் மிக நன்றாக அறிந்திருந்தால் மட்டுமே ஸ்ரீ கிருஷ்ணருக்கும் சிவபெருமானுக்கும் உள்ள சம்பந்தத்தைச் சரியாக அறிய முடியும்.

### நிலைநாட்டப்பட்ட உண்மை

தத்துவ ரீதியாக, சிவபெருமான் ஸ்ரீ கிருஷ்ணரின் அம்சமான சதாசிவனின் ஒரு அம்சமேயாகும். ஸ்ரீ கிருஷ்ணர் சிருஷ்டிக்க ஆசைப்படும்போது அவரிடமிருந்து மகா ஸங்கர்ஷணர் தோன்றுகிறார். பின், மகா ஸங்கர்ஷணரிடமிருந்து காரணோதகசாயி விஷ்ணு என்ற மகா விஷ்ணு தோன்றுகிறார். மகாவிஷ்ணு பின்னர் சிருஷ்டிக்க ஆசைப்படுகிறார். அப்போது அவரது நெற்றிப் புருவத்தி லிருந்து படைக்கும் ஆசை ஓர் பேரொளிக் கதிராக வெளிப்படுகிறது. அந்த ஒளிக் கதிரின் மங்கிய சாயலுக்கு சுயம்பு லிங்கம் (சிவா) என்று பெயர். ஏராளமானவர்கள் சிவபெருமானை சுயம்புலிங்கமாக வழிபடு கிறார்கள். ஆனால் அந்த மூல ஒளிக்கதிரோ சர்வ நிரந்தரமானது. அது சுயம்புலிங்கம் அல்ல. அந்த ஒளிக்கதிரின் சாயல்தான் சுயம்புலிங்கம்.

இதேபோல் யோனி என்ற இன்னொரு சாயல் ரமா தேவியிடமிருந்து உண்டாகிறது. ரமா தேவி மகா விஷ்ணுவின் ஆன்ம சக்தியாகும். இதே ரமா தேவிதான், வைகுந்தத்தில் ஸ்ரீமன் நாராயணரின் துணைவியான மகா இலட்சுமி ஆகும். மூல வடிவமான இந்த ரமா தேவி அல்லது மகா இலட்சுமியின் சாயலில் உண்டாவதே யோனி என்ற கருத்தரிக்கும் சக்தியாகும்.

மகாவிஷ்ணு தன்னிடமிருக்கும் இரண்டு வகையான சக்திகள் மூலம் படைத்தல் தொழிலைப் புரிகிறார். ஒன்று, நிமித்தம் அல்லது காரணகர்த்தா. இரண்டு, உபாதானம் அல்லது காரண கருவி. இவற்றை நாம் ஒரு உதாரணம் வழியாக சுலபமாகப் புரிந்து கொள்ளலாம். ஒருவன், “நான் பாம்பை இந்தக் கம்பால் கொன்றேன்” என்று கூறும்போது அதில் பாம்பைக் கொன்றவன் காரணகர்த்தா (நிமித்தம்) ஆகிறான். அந்தக் கம்பு காரண கருவி (உபாதானம்) ஆகிறது. இன்னொரு உதாரணமும் கொடுக்கலாம். குயவன் ஒருவன் ஒரு மண்பாண்டத்தைச் செய்கிறான் என்று வைத்துக் கொள்வோம். இதில் மண்பாண்டத்தை உருவாக்கக் காரணமாக இருந்த குயவன் காரணகர்த்தா (நிமித்தம்) ஆகிறான். ஆனால், மண்பாண்டத்தை உருவாக்கத் தேவையான மண், சக்கரம், தண்ணீர் இப்படி அனைத்துப் பொருட்களும் காரண கருவிகள் அல்லது உபாதானம் ஆகிறது.

மஹாவிஷ்ணுவின் ஆன்ம சக்தியின் சாயலான யோனி காரணகர்த்தாவாகவும், அவரிடமிருந்து தோன்றிய சுயம்புலிங்கம் காரண கருவியாகவும் இயங்கி, இவை இரண்டும் சேரும்போது படைத்தல் நடைபெறுகிறது. பரம்பொருளான இறைவனின் புருஷத்தன்மை, சுயம்பு என்ற லிங்கமாகத் தோன்றி, படைத்தலைப் புரிகின்றது. மேலும், இந்த பூதவுலகத்தின் தோற்றத்திற்கு காரணம் மாயா தேவி. அவளது வெளித்தோற்றமே யோனியாகும்.

உண்மையில் சொல்லப்போனால், சுயம்புவோ, யோனியோ படைத்தலுக்கு மூல காரணமல்ல. அந்த மகாவிஷ்ணுவே மூல காரண மாகும். மகா விஷ்ணுவினால் உந்தப்பட்டு அவரது காம பீஜத்தை மாயாசக்தியிடம் செலுத்தியதால்தான், அவள் யோனியாக தோற்ற மெடுக்கிறாள். எனவே அவள் இரண்டாவது காரணமே. படைத்தலுக்கு வேண்டிய அனைத்துப் பொருட்களையும் சுயம்பு அளிக்கிறார். எனவே சுயம்பு காரணக்கருவியாகிறார். மேலும், மகா விஷ்ணுவின் புருவத்தில் பிறந்த ஒளிக்கதிரின் சாயையிலிருந்து தோன்றிய சுயம்புவும் யோனியும் சேர்ந்தாலும், உண்மையிலேயே படைத்தலுக்கான உந்தல் மகா விஷ்ணுவிடமிருந்தே வருகின்றது. எனவே சுயம்பு, மகா விஷ்ணுவின் கட்டுதலிலேயே உள்ளார். சுயம்புவால் தானாக படைத்தலை மேற்கொள்ள முடியாது.

மகாவிஷ்ணுவே மூலகாரணமான கர்த்தா. யோனியும் சுயம்புவும் அவரது விருப்ப ஆணையை அமல்படுத்துபவர்களே. எனவே, ஸ்ரீ கிருஷ்ணரின் முழு அம்சனமான மகா விஷ்ணுதான் உண்மையிலேயே அனைத்தையும் படைப்பவர். எதையுமே உற்பத்தி செய்வதற்கு முதலில் அதை எண்ணங்கொண்டு செயல்படுத்துபவர் ஒருவர் தேவை. மகா விஷ்ணுவின் இச்சையே காரண கர்த்தாவுடனும் காரணப் பொருளுடனும் சேர்ந்து படைத்தலாக வெளிப்படுகிறது.

படைத்தல் உண்டாகும்போது அதன் முதலாவது படிநிலை 'மஹத் தத்வம்' என்று அழைக்கப்படுகிறது. இது மொத்தம் இருபத்து நான்கு அடிப்படை மூலப்பொருட்களைக் *(elements)* கொண்டவை*. இந்த 'மஹத் தத்வம்' உண்மையில் காம பீஜத்தின் பிரதி பிம்பமே *(reflection)* ஆகும். ஆனால் இந்த காம பீஜமோ, கோலோக

---

* மஹத் தத்வம் (மொத்தம் இருபத்துநான்கு சேர்ந்தவை)

| | | |
|---|---|---|
| 5 பூதங்கள் | : | (வெளி, வளி, தீ, நீர், பூமி) |
| 5 நுட்பங்கள் | : | (ஒலி, ஸ்பரிஸம், ரூபம், நிறம், மணம்) |
| 5 அறிபுலன்கள் | : | (காது, மெய், கண், நாக்கு, மூக்கு) |
| 5 செய்புலன்கள் | : | (வாயும் நாவும், கைகள், கால்கள், பிறப்பு உறுப்புக்கள், குதம்) |
| 4 உள் நுட்பங்கள் | : | (மனம், புத்தி, அகங்காரம், தன்னுணர்வு) |



பிருந்தாவனத்திலிருந்து உண்டான படைக்கும் இச்சையை மூல விதையாகக் கொண்டது. அந்த மூல இச்சையின் தலைகீழ் பரிணாமமே பூதவுலகில் நாம் காணும் காம இச்சையாகும். கோலோக பிருந்தாவனம் எல்லா பூதவுலகங்களுக்கும் அப்பாற்பட்டு வெகு தூரத்தில் இருந்தாலும், காம பீஜத்தின் தலைகீழான பிரதிபிம்பம் இங்கே விகாரமாக உடல் சம்பந்தப்பட்ட சிற்றின்ப இச்சையாக மாறி படைப்பை ஏற்படுத்துகிறது.

## ஐஸ்வரிய பாவ லீலைகளில் சேவகம்

நாம் ஸ்ரீ கிருஷ்ணருக்கும் சிவபெருமானுக்குமிடையிலுள்ள சம்பந்தங்களை சரித்திர அடிப்படையில் பார்த்தோமானால், ஸ்ரீ கிருஷ்ணரின் ஐஸ்வரிய *(opulent)* லீலைகளின் மூலமாக மிக நன்றாக அறிந்து கொள்ளலாம். ஸ்ரீமத் பாகவதம், சிவபெருமான் எவ்வாறு சுய சுதந்திரமில்லாமல், ஸ்ரீ கிருஷ்ணரின் ஆதரவிலேயே எப்போதும் இருப்பதை விவரிக்கின்றது. மேலும் இந்த மகா உத்தம புராணத்தில், சிவபெருமான் எவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணரின் லீலைகளுக்கு உதவும்படி, ஸ்ரீ கிருஷ்ணரிடம் பகை கொண்டவர்கள் எவரும் தன்னிடம் வந்து வரம் வேண்டும்போது, அவர் அளிக்கும் வரங்களில் யாருமே கண்டு கொள்ள முடியாத அளவுக்கு குறை ஏதாவது வைத்துக் கொடுத்து விடுவார் என்பதும் விளக்கப்பட்டுள்ளது.

## சிவபெருமான் கிருஷ்ணரைச் சார்ந்தவர்

ஸ்ரீமத் பாகவதத்தில் விருக்காசுரன் என்ற ஓர் அசுரன் சிவபெருமானின் துணைவியான பார்வதியை தான் மனைவியாக அடைய வேண்டுமென்று பேராசைப்பட்டு, அந்தச் சிவபெருமானையே நோக்கித் தவமிருந்த சரித்திரம் வருகிறது. விருக்காசுரனின் கடுந்தவத்தைக் கண்டு திருப்திப்பட்டு சிவபெருமான் அவன் முன் தோன்றி, "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு அவன், "நான் எவரது தலையைத் தொடுகிறேனோ அவரது தலை உடனே வெடித்துச் சாக வேண்டும்" என்று வரம் கேட்டான்.

சிவபெருமானும் அவன் கேட்ட வரத்தை வழங்கினார். ஆனால் அந்த அசுரனோ உடனே அதை உபயோகிக்க, அவனது கையைக் கொண்டு வரங்கொடுத்த அந்த சிவபெருமானின் தலையையே குறி வைத்து தன் விரலை அவரிடம் நீட்டி நெருங்கினான்.

சிவபெருமான் இதைக் கொஞ்சம்கூட எதிர்பார்க்காததால், "நீ என்ன காரியம் செய்கிறாய்?" என்று கேட்டார்.

"நீர் அளித்த வரத்தை நான் இப்போது உபயோகப்படுத்துகிறேன்" என்றான் அசுரன். தனக்கு பார்வதி தேவி வேண்டும் என்பதை நேரடியாகக் கூறாமல், பார்வதி தேவியைப் பார்த்துக் கொண்டே

சிவபெருமானின் தலையைத் தொடுவதற்காக ஓடினான். இதைக் கண்ட சிவபெருமான் பயந்து, தன் தலையைக் காப்பாற்ற தலைதெறிக்கும் வேகத்துடன் ஓட ஆரம்பித்தார்! ஆனால் விருக்காசுரனோ அவர் பின்னால் துரத்திக் கொண்டே ஓடினான். சிவபெருமான் வேகமாக ஓடியதால் அவர் அணிந்திருந்த மான் தோலாடை கீழே நழுவியோடியது! அதன்பின் அவரது கையிலிருந்த உடுக்கை கீழே விழுந்தது! அவரோ நிற்காமல் ஓடினார். அப்போதுதான் அவருக்கு தனது பரம இறைவன் மட்டுமே அவரைக் காப்பாற்ற முடியும் என்ற எண்ணம் வந்தது. அவர் எந்த இறைவனை நினைத்தார்? பரம இறைவனான ஸ்ரீ கிருஷ்ணரையே அவர் நினைத்தார்! இதுதான் ஐஸ்வர்ய கத விசாரம்!

சிவபெருமான் பூவுலகிலிருந்து வானத்துக்குத் தாவி ஓடினார். பின்னர் மற்ற பூ மண்டலங்களையெல்லாம் தாண்டி பேரண்டங்களை (*universes*)யும் கடந்து அனைத்துப் பூதவுலகங்களின் கடைசி எல்லைக்கே வந்துவிட்டார். விருக்காசுரனும் அவரைப் பின்தொடர்ந்து ஓடிக் கொண்டேயிருந்தான். பேரண்டங்களையெல்லாம் படைத்த பிரம்மா மற்றும் இந்திரன், சந்திரன் போன்ற எந்தப் பெரிய தேவர்களாலும் சிவபெருமானை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்ற முடியவில்லை. கடைசியாக ஸ்வேதத்விபாவில் உறைந்திருக்கும் ஸ்ரீகிருஷ்ணரின் அவதாரமான விஷ்ணுவிடம் அபயம் கேட்டார். உடனே விஷ்ணு தன்னை ஓர் அழகான வாலிபப் பருவ பிராமணனாக வேஷம் தரித்து, விருக்காசுரனின் முன் போய் நின்றார். அந்தப் பிராமணனின் முகத்திலிருந்து ஆன்மீக ஒளி திவ்வியமாக பிரகாசித்தது. அது சிவபெருமானையும் விருக்காசுரனையும் கவர்ந்து இழுத்தது. அந்தப் பிராமண வாலிபனோ, விருக்காசுரனுக்கு மரியாதையுடன் வணக்கங்களைச் செலுத்தி, அவனிடம் தேனினும் இனிய வகையில் அன்பாகப் பேசி தன்மேல் அவனுக்கு அசைக்க முடியாத முழு நம்பிக்கையும் ஆதரவும் வருமாறு செய்தார். பின்னர் அந்த அசுரனை நோக்கி, "சிவபெருமானைத் துரத்திக் கொண்டு இவ்வாறு ஓடக் காரணம் என்ன?" என்று கேட்டார்.

அதற்கு அந்த அசுரன், "அவர் எனக்கு ஒரு வரம் கொடுத்துள்ளார். அதன்படி, நான் எவரது தலையைத் தொடுகிறேனோ, அந்தத் தலை உடனே வெடிக்க வேண்டும். நான் அந்த வரத்தை அவரின் மேல் பரீட்சை செய்து பார்க்கிறேன்" என்றான்.

இளம் பிராமணனாக வந்த விஷ்ணு "நீ ஒரு சரியான முட்டாள்! இடைவிடாமல் கஞ்சாவைப் புகைத்துக் கொண்டும், எல்லாவிதமான போதைப்பொருட்களையும் உட்கொண்டும், எப்போதும் சுடுகாட்டிலிருக்கும் இவர் கொடுத்த வரத்தைப் போய் நம்புகிறாயே! அவர் வரங்கொடுக்கத் தகுதியுள்ளவர் என்றும், மிக சக்தி வாய்ந்தவர் என்றும் நீ உண்மையிலேயே நம்புகிறாயா? அவரது வரம் பொய். அவர் உன்னை முட்டாளாக்கியிருக்கிறார்! நீ அவரை இப்படித் துரத்திக்



கொண்டு ஓடுகிறாயே! கடைசியில் அவர் கொடுத்த வரம் பொய் என்று உனக்கு நன்றாகவே தெரியும். வேண்டுமானால் நீ உன் தலையில் வைத்தே பார்த்து விடலாமே! நீ பார் ஒன்றும் ஆகாது!" என்றார்.

விருக்காசுரனும் உடனே, "ஆம், பரீட்சை செய்துவிடுகிறேன்" என்றான். பகவான் விஷ்ணுவின் மாய சக்தியினால் அவன் முழுவதுமாக குழப்பமடைந்து பரமசிவனின் சக்தியையும் அவர் அளிக்கும் வரங்களின் வலிமையையும் மறந்து போனான். தன் கையைத் தானே தலையில் வைத்துத் தொட்டான். அவ்வளவுதான்! அவனது தலை சுக்கு நூறாகத் தெறித்தது.

இந்த லீலையிலிருந்து நமக்கு என்ன விளங்குகிறது? பரமசிவனின் வணக்கத்துக்குரிய இறைவன் ஸ்ரீ கிருஷ்ணரே என்பது!

## சிவபெருமானைப் பேணுபவர்

சிவபெருமான் நிகழ்த்தும் ஒவ்வொரு லீலையும் ஸ்ரீ கிருஷ்ணரின் மகிமையை உலகெல்லாம் உணர்த்தி உலக மக்கள் ஸ்ரீ கிருஷ்ணரின் மேல் பக்தி கொண்டு சேவை செய்ய வேண்டுமென்ற ஒரே நோக்கத்தைக் கொண்டவையே. அதற்கு உதாரணமாகக் பின்வரும் சரித்திரத்தைப் பார்ப்போம்.

ஒரு சமயம் தேவர்கள் அனைவரும் அசுரர்களிடம் போர் புரிந்து அவர்களை வென்றனர். தோல்வியடைந்த அசுரர்களோ மாயதானவன் என்ற தங்கள் அசுரத் தலைவனிடம் சென்று முறையிட்டனர். மாயதானவன் மூன்று பிரம்மாண்டமான விமானங்களை உருவாக்கினான். ஒவ்வொரு விமானமும் ஒரு நகரம் மாதிரி பெரியது! அவற்றைக் கொண்டு அவன் எல்லா உலகங்களையும் அழிக்க ஆரம்பித்தான்.

இப்படி அவன் கீழுள்ள உலகங்களை அழித்து, பின்னர் மேல் உலகங்களையும் அழிக்க ஆரம்பித்தபோது மேல் உலகங்களிலுள்ள தேவர்கள் சிவபெருமானிடம் சென்று, "இறைவனே! நாங்கள் எல்லோரும் அழியும் நிலையிலுள்ளோம். தயவு செய்து எங்களை உடனே காத்தருள வேண்டும்" என்று முறையிட்டனர்.

சிவபெருமான் உடனே அவர்களிடம், "பயம் வேண்டாம்! நான் உங்களைக் காப்பாற்றுகிறேன்" என்று உறுதியளித்து தன் அம்புகளை ஏவி அந்த மூன்று விமானங்களையும் தாக்கி அதனுள்ளிருந்த எல்லா அசுரர்களையும் கொன்றார். ஆனால் அந்த மாயதானவனோ இறந்த அனைத்து அசுரர்களின் உடல்களையும் அவன் முன்னர் உருவாக்கிய அமிர்தப் பொய்கையில் நனைத்து, எல்லா அசுரர்களையும் திரும்பவும் உயிர் பெற வைத்தது மட்டுமின்றி, இப்போது அவர்கள் தங்களை எவரும் கண்ணால் பார்க்க முடியாதவாறு சக்தியும் பெற்றனர்!

இதைச் சற்றும் எதிர்பார்க்காத சிவபெருமான் மிகவும் குழப்பமும் கவலையுமுற்றார். இதைக்கண்ட ஸ்ரீ கிருஷ்ண பகவானின் அம்சமான விஷ்ணு, தன்னை ஒரு பசுவாக வேடம் கொண்டு, பிரம்ம தேவரைக் கன்றுக்குட்டியாக வேடந்தரிக்க வைத்து, இருவரும் அந்த அசுரர்களின் அமிர்தப் பொய்கையிலிருந்த அமிர்தம் அனைத்தையும் குடித்தனர். பின்னர் ஸ்ரீ கிருஷ்ணர் சிவபெருமானுக்குப் போர் புரிவதற்காக ஒரு பெரிய ரதத்தை உருவாக்கினார். மேலும் அதற்கு வேண்டிய தேரோட்டி, கொடி, குதிரைகள், அம்புகள், விற்கள், கவசங்கள் மற்றும் யானைகள் இப்படி அனைத்தையும் அளித்தார். சிவபெருமான் அவற்றைக் கொண்டு அசுரர்களின் மூன்று புரங்களையும் அழித்தார். மேலுலக வாசிகள் அனைவரும் சிவபெருமானை "திருபுரம் எரித்தவர்"என்று கொண்டாடி வழிபட்டனர்.

எனவே நீங்கள் எவருமே பயப்பட வேண்டாம். நீ உன்னை முழுவதுமாக ஸ்ரீ கிருஷ்ணரிடம் ஒப்படைத்திருந்தால் அவர் கண்டிப்பாக உன்னைக் காப்பார். இதை அவரே பகவத் கீதையில் சத்தியமும் செய்திருக்கிறார். ஆனால் நீ உன்னை "முழுவதுமாக" அவரிடம் கொடுத்திருக்க வேண்டும். அதாவது, உன் உடல் மட்டுமல்லாமல், உன் புத்தி, புலன்கள் மற்றும் உன்னிடம் என்னவெல்லாம் உள்ளதோ அவை அனைத்தையும் அவரிடம் அர்ப்பணம் செய்துவிட வேண்டும். நீ அவ்வாறு செய்தால் மட்டுமே அவர் உன்னை "நேரடியாக"க் கவனித்துக் கொள்வார். இதில் பயமோ, சந்தேகமோ சிறிதுகூட வேண்டாம். அதன்பின் எந்தவிதமான சங்கடங்களும் உன்னைத் தொடமுடியாது. அது மட்டுமின்றி, கிடைக்கப் பெறாத மகா பெரும் பாக்கியமான பக்தியை அவர் உனக்களித்து உன்னை என்றும் ஆனந்தத்தில் திளைக்கச் செய்வார்!

## சிவபெருமான் வழிபடும் பரம இறைவன்

இனி, ஸ்ரீ கிருஷ்ணரின் ஐஸ்வர்ய லீலைகளின் வழியாக சிவபெருமானுக்கும் ஸ்ரீ கிருஷ்ணருக்கும் இடையிலுள்ள பரஸ்பர சம்பந்தத்தை அனுருத்தாவின் சரித்திரம் வழியாக நாம் மேலும் அறியலாம். ஸ்ரீ கிருஷ்ணரின் பேரன் அனுருத்தா. அவன் பானாசுரன் என்ற அசுரனின் மகளைத் திருமணம் செய்ய ஆசைப்பட்டான். பானாசுரனோ ஒரு மிகச்சிறந்த சிவ பக்தன். அவனது சிறப்பான சிவபக்தியால் சிவபெருமானிடமிருந்து அவன் ஆயிரம் கரங்களைப் பெற்றவன்! தன் ஆயிரம் கரங்களைக் கொண்டு அவன் எப்போதும் சிவபெருமானை வழிபட்டான். அது மட்டுமின்றி, சிவபெருமான் நடனமாடும்போது அவன் தன் ஆயிரம் கரங்களையும் கொண்டு உடுக்கைகளை இராகங்களுடன் அடித்துத் துதித்துப் பாடுவான். அதனால் சிவபெருமானின் தனிப்பட்ட பாதுகாப்பைப் பெற்றவன். எந்த எதிரியுமே தன்னை நெருங்கமுடியாத அளவு சக்தி படைத்திருந்தான். அனுருத்தா தன் மகள் உஷாவைச் சந்தித்தபோது, எளிதாக அனுருத்தாவை மடக்கிப் பிடித்து சிறையில் வைத்திருந்தான்.



அனுருத்தா சிறைப்படுத்தப்பட்டதை நாரதமுனிவர் அறிந்து, ஸ்ரீ கிருஷ்ணரிடம் சென்று தெரியப்படுத்தினார். ஸ்ரீ கிருஷ்ணர் தன் யாதவப் படைகளைக் கொண்டு போர் புரிய வந்தார். தன் நகரை நெருங்கி வந்து கொண்டிருந்த படைகளைக் கண்டதும் பானாசுரன் தன் படைகளைக் கொண்டு உடனடியாக எதிர்த்துத் தாக்க ஆரம்பித்தான்.

இதைக் கண்ட சிவபெருமான் தன் பக்தனுக்கு உதவி செய்ய வேண்டுமென்று உடனே அங்கு தோன்றினார். மேலும், அவரது இறைவனான ஸ்ரீ கிருஷ்ணரை வழிபடாமலேயே பானாசுரனின் பக்கம் சார்ந்து அவனது தளபதியாகவே நின்று போரை நடத்தினார். அதுமட்டுமல்லாமல் அவர் ஸ்ரீ கிருஷ்ணருக்கு நேருக்கு நேர் போர் புரிந்தார்! சிவபெருமான், ஸ்ரீ கிருஷ்ணரின் மேல் நிறைய அம்புகளை ஏவினார்! அது மட்டுமல்லாமல் தன் மிகவும் உச்ச சக்திவாய்ந்த பாசுபத அஸ்திரங்களையும், எல்லாவற்றையும் விட உத்தம சக்தி வாய்ந்த சிவ-ஜ்வராவையும் ஸ்ரீ கிருஷ்ணர் மேல் ஏவினார். ஆனால் எந்த அம்புகளும், அஸ்திரங்களும் ஸ்ரீ கிருஷ்ணரிடம் ஒன்றும் செய்ய இயலவில்லை. அவை அனைத்தும் தோற்றன!

பானாசுரனும் ஸ்ரீ கிருஷ்ணரின் மேல் தன்னுடைய ஆயிரம் கரங்களையும் ஒரே சமயத்தில் உபயோகித்து அம்புகளைச் சரமாரியாக பொழிந்தான். ஸ்ரீ கிருஷ்ணரோ தன் சுதர்ஸன சக்கராயுதத்தைக் கொண்டு பானாசுரனின் கரங்களை வெட்டினார். கடைசியில் நான்கு கைகளுடன் நின்றான்.

இப்போது சிவபெருமான், தன்னால் இனி பானாசுரனைக் காக்க இயலாது என்பதைத் திண்ணமாக உணர்ந்து, ஸ்ரீ கிருஷ்ணரிடம் சரணடைந்து தன் இதயத்திலிருந்து உருக்கமாக ஸ்ரீ கிருஷ்ணரைப் பாடித் துதித்தார்.

சிவபெருமானின் உருக்கமான பிரார்த்தனைகளைக் கேட்டு ஸ்ரீ கிருஷ்ணர், "இந்த பானாசுரன், பாலி மகாராஜாவின் மகன். பிரகலாத மகாராஜாவின் கொள்ளுப்பேரன். ஆனால் எல்லாவற்றிலும் முக்கியமாக, அவன் உமது பக்தன். எனவேதான் நான் அவனைக் கொல்லாமல் விட்டேன். அது மட்டுமின்றி, அவனுக்குச் சாகா வரத்தையும் கொடுத்திருக்கிறேன்" என்று சிவபெருமானிடம் கூறினார்.

## சிவபெருமான் அடைக்கலமடைந்தார்

மகாபுராணமான ஸ்ரீமத் பாகவதத்திலும், மற்றும் ஸ்கந்த புராணத்திலும், ஸ்ரீ கிருஷ்ணர் துவாரகையிலிருக்கும்போது அவர் அடிக்கடி நான்கு கைகளோடு தோன்றி வாசுதேவராக இருப்பார் என்று எழுதப்பட்டுள்ளது. கூறப்போனால் ஸ்ரீ கிருஷ்ணர் இவ்வாறு அடிக்கடி நான்கு கைகளுடன் தோன்றுவது துவாரகையில் அனைவரும் அறிந்த

ஒரு லீலையாகும். ஸ்ரீ கிருஷ்ணர் துவாரகையில் இருந்த அதே சமயம் பௌண்ட்ரகா என்ற ஒரு மன்னன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு சமயம் பொய்க் கைகளைத் தன் உடம்பில் பொருத்தி எல்லோரிடமும், "நான்தான் உண்மையான வாசுதேவன்; கிருஷ்ணர் பொய்யான வாசுதேவன்" என்று பறைசாற்றி இதைப் பற்றி ஓலையிலும் எழுதி ஸ்ரீ கிருஷ்ணருக்கு அனுப்பி சவால் விட்டான். "நான்தான் உண்மையில் நான்கு கைகளுள்ள வாசுதேவன். எனவே நீ இனி உன்னை நான்கு கைகளுள்ள வாசுதேவன் என்று சொல்வதை உடனே நிறுத்து!" என்று ஓலையில் எழுதப்பட்டிருந்தது. இதைக் கண்டு ஸ்ரீ கிருஷ்ணரும் அவரது அரண்மனையிலுள்ள அனைவரும் கைக்கொட்டிச் சிரித்தனர். பதில் ஓலையில் ஸ்ரீ கிருஷ்ணர் அதை மறுத்ததுடன் நேருக்கு நேராகப் போர் புரியவும் தயார் என்று எழுதி அனுப்பினார்.

பெரும்போர் நடந்தது. போரில் காசியை அப்போது ஆண்டுவந்த மன்னன் பௌண்ட்ரகாவின் பக்கம் சேர்ந்தான். காசி மன்னனோ ஒரு பழுத்த சிவபக்தன்! எனவே, நடந்த போரில், சிவபெருமான் காசி மன்னனின் பக்கபலமாக போரில் நின்றார். மேலும் பௌண்ட்ரகா, ஸ்ரீ கிருஷ்ணரை வெல்லுவதற்காக வேண்டிய வரத்தையும் சிவபெருமானிடம் வாங்கியிருந்தான்! ஆனால் நடந்த போரில் அவர்கள் அனைவரும் தோல்வி பெற்றது மட்டுமின்றி காசி மன்னனும் பௌண்ட்ரகாவும் கொல்லப்பட்டார்கள். ஸ்ரீ கிருஷ்ணர் தன் சுதர்ஸன சக்கரத்தால் பௌண்டரகாவையும், அம்புகளால் காசி மன்னனையும் கொன்றார். அது மட்டுமின்றி காசி மன்னனின் வெட்டப்பட்ட தலை, காசிப்பட்டிணத்தின் உள்ளே போய் விழும்படியும் செய்தார்.

மேலும், காசி மன்னனுக்கு சுதக்ஷினன் என்று ஒரு மகன் இருந்தான். தன் தந்தையின் சாவுக்கு பழிக்குப் பழி வாங்குவதாக உறுதி எடுத்து காசியில் உறைந்துள்ள விஸ்வநாதரை வழிபட்டான். சிவபெருமான் அவனுக்குக் காட்சியளித்து விசேஷமான யக்ஞம் ஒன்றை மேற்கொள்ளக் கூறினார். இந்த யக்ஞம் ஒரு அக்னி அசுரனை உருவாக்கி சுதக்ஷினனின் பகைவர்கள் அனைவரையும் அக்னியில் தள்ளிக் கொல்வதாகும். மேலும் சிவபெருமான் தன் கணங்களையும் பூதங்களையும்கூட அக்னி அசுரனுக்கு உதவியாக அனுப்பி வைத்தார். யக்ஞம் நடந்தது, துவாரகை தாக்கப்பட்டது!

இதைக் கண்ட ஸ்ரீ கிருஷ்ணர் தனது சுதர்ஸன் சுக்கரத்தால் அக்னி அசுரனைத் தடுத்து செயலற்றவனாக்கியது மட்டுமின்றி அவரது சக்கராயுதத்தால் அசுரனை திரும்பவும் காசிக்கே பின்னால் விரட்டி, யார் அவனை ஏவி விட்டார்களோ அவர்களையே கொல்ல வைத்தார். அது மட்டுமல்லாமல் அவரது சக்கராயுதத்தால் காசி நகரத்தையே எரித்துச் சாம்பலாக்கினார்!



நிலமையைக் கண்ட சிவபெருமான் காசியை விட்டே ஓடினார். ஓடும்போது, தன் மான் தோல் ஆடை எங்கே விழுந்தது என்பதுகூட அவருக்குத் தெரியவில்லை. அது மட்டுமல்லாமல், தன் திரிசூலம் மற்றும் தன் மனைவி பார்வதி தேவியையும்கூட விட்டுவிட்டு ஓடினார். இவ்வாறு ஓடி ஹரிஹர சேத்ரா என்று கூறப்படும் நவத்தீபா*வை வந்து அடைந்தார். அதுவே ஸ்ரீ சைதன்ய மகாபிரபு** தோன்றிய இடம். பின்னர் அங்கிருந்து தற்போதைய ஒரிஸ்ஸாவில் பூரி நகரத்தின் பக்கமான புவனேஸ்வர் என்று அழைக்கப்படும் ஏகாம்பர கானத்திற்குச் சென்றார். அதன்பின் ஸ்ரீ கிருஷ்ணரின் வடிவமான ஜகன்னாத தேவரை வழிபட்டார். இந்த லீலையும் ஸ்ரீ கிருஷ்ணரின் ஐஸ்வர்ய கதவிசாரமேயாகும். இவைகளிலிருந்து, சிவபெருமான் வழிபடும் இறைவன் ஸ்ரீ சைதன்ய மகாபிரபு, அதாவது ஸ்ரீ கிருஷ்ணரே என்பது தெளிவாகிறது.

---

* நித்யானந்த பிரபு கூறினார், "அலகாநந்தா நதிக்கு மேற்கேயுள்ள காசியில், சிவபெருமானின் பக்தர்களும் பார்வதி தேவியின் பக்தர்களும் முக்தியை வேண்டுகின்றனர். ஆனால் நவத்வீப் காசியோ அந்த காசியைவிட மிக உயர்ந்தது. இங்கே சிவபெருமான் எப்போதும் "ஹௌரா" என்று சைதன்ய மகாபிரபுவின் பெயரை உச்சரித்தும் பாடியும் நடனமாடுகிறார். மேலும் அவர் தன் பக்தர்களிடம் ஹௌர பக்தியை நாடுமாறு கெஞ்சிக் கேட்கிறார். அந்த பக்கமான காசியில், சன்னியாஸிகள் ஆயிரக்கணக்கான வருடங்கள் தவசி இருந்தால் மட்டுமே அவர்கள் ஞானம் பெற்று முக்தி அடைய முடியும். ஆனால் இங்கே ஹௌரங்க மகா பிரபுவின் பெயரை உச்சரித்தும் பாடியும் அதே முக்தியை காலால் உதைத்து எறிகின்றனர்! இங்கே இறப்பவர்களின் காதில் சிவபெருமான் ஹௌரங்காவின் பெயரை உச்சரிக்கிறார். எனவே நவத்வீப் காசியை மகா-வாரணாஸி என்று அழைக்கிறார்கள். ஏனென்றால் இங்கு யாருக்கும் சாவுக்குப் பயமேயில்லை!" (ஸ்ரீ நவத்வீபா மகாத்மியா - ஸ்ரீல பக்தி விநோத தாக்கூரா)

** ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. "தற்போதைய யுகமான கலியுகத்தில் இறைவனின் நாமங்களை உச்சரிப்பதும் பாடுவதும் மட்டுமே ஜீவனின் உகந்த தர்மம் என்று வேதங்கள் கூறுகின்றன. கலியுக அவதாரமான ஸ்ரீ சைதன்ய மகா பிரபு, இவ்வாறு நாம சங்கீர்த்தனைகளையும் கூட்டுப் பிரார்த்தனைகளையுமே உபதேசித்தார். மேலும் இந்த பக்தி முறையை ஸ்ரீ கிருஷ்ணரைத் தவிர வேறு எவராலும் சரியாக சொல்லித் தர முடியாது. ஒரு பக்தனுக்கும் அவனுடைய உயிருக்குயிரான இறைவனுக்கும் இடையில் என்னவென்ன விதங்களான உறவுகள் உண்டு என்பதையும், எவ்வாறு உறவுகளை அனுசரிக்க வேண்டும் என்பதையும் ஸ்ரீ கிருஷ்ணரைத் தவிர வேறு யாராலும் விளக்க இயலாது. எனவேதான் அவர் தாமே சைதன்ய மகா பிரபுவாக அவதரித்தார். (ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதா, ஆதி லீலா, அத்தியாயம் 3 சுருக்கவுரை)

# ஸ்ரீ கிருஷ்ணரின் மனித ரூப லீலைகளில் சேவை

இதுவரை நாம் ஸ்ரீ கிருஷ்ணரின் ஐஸ்வர்ய கத விசாரத்தைப் பற்றிப் பார்த்தோம். இனி அவரது நரவத கத விசாரம் - அல்லது மனித வடிவில் அவதரித்து நடத்திய இனிய லீலைகள் வழியாக சிவபெருமானின் சம்பந்தத்தைக் காண்போம். இதற்கு ஸ்ரீ இராமச்சந்திர பகவான் சிவபெருமானை வழிபட்ட சரித்திரம் ஒரு சரியான உதாரணமாகும். நாம் முன்பு கூறியதுபோல், ஸ்ரீ இராமச்சந்திர பகவான் ஒரு சாதாரண மனிதனின் ரூபத்தில், இலங்கைக்குச் செல்ல சமுத்திரத்தில் பாலம் கட்டும் அரிய செயலை முடிக்க வேண்டிய சக்திக்காக சிவபெருமானை வழிபட்டார்.

ஸ்ரீ இராமச்சந்திர பகவான், இராமேஸ்வர மகாதேவரை ஒரு லிங்கமாக பிரதிஷ்டை செய்து, சிவபெருமானின் உதவியால், தான் அந்த சமுத்திரத்தைத் தாண்ட முடியும் என்று எண்ணி வழிபட்டார். உண்மையில் ஸ்ரீ இராமச்சந்திரர் இலங்கைக்கு ஒரே கணத்தில் பாலம் எதுவுமின்றி செல்ல முடியும்! சாதாரண மக்களை ஈர்க்கவும் ஊக்குவிக்கவும் வேண்டியே அவர் தன் மனித ரூப லீலைகளை இவ்வாறு நிகழ்த்துகிறார். ஆனால் அப்போது அங்கிருந்த சாதாரண மக்களோ, "இராமேஸ்வரர் என்றால், மகாதேவர்தான் ஸ்ரீ இராமச்சந்திரரின் இறைவன் என்று அர்த்தம்" என்று தவறாகப் புரிந்து கொண்டனர். இதைக் கண்ட தேவர்கள் உடனே அங்கு தோன்றி, "இராமேஸ்வர மகா தேவரும், இராமச்சந்திரரும் வேறு அல்ல. அவர்கள் ஒன்றே. ஒரே பரம இறைவனின் ரூபங்களே அவர்கள். சாதாரண மக்கள் இராமேஸ்வரர்தான் இராமரின் இறைவன் என்று எண்ணுகிறார்கள். அது சரியல்ல" என்று கூறினார்கள். அதேசமயம் சிவபெருமானே லிங்கம் பிளக்கத் தோன்றி, "இல்லையில்லை! தயவு செய்து இதைச் சரியாகப் புரிந்து கொள்ளுங்கள். 'இராமேஸ்வரா' என்றால் 'எவருக்கு ஸ்ரீ இராமர் இறைவனோ அவர்' என்று அர்த்தம். என் இறைவன் ஸ்ரீ ராம்!" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

ஸ்ரீ இராமச்சந்திரரின் லீலைகளைப் பற்றி இராமாயணம், ஸ்ரீமத் பாகவதம், புராணங்கள் மற்றும் இராமசரித மானஸா என்று பற்பல நூல்களிலும் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு திரேதா யுகத்திலும் அவர் இவ்வாறு லீலைகள் நடத்துகிறார். சென்ற திரேதா யுகத்தில் நிகழ்த்திய லீலையில், இராவணன் அவரது மனைவி சீதாதேவியை இலங்கைக்குக் கடத்திச் சென்றான். சீதா தேவி எங்கே என்பதை அறிவதற்கு முன்னர், தேவியின் பிரிவால் இராமர் கதறி அழுதார். இலட்சுமணன் எவ்வளவோ ஆறுதல்கள் கூறியும், இராமரால் தன் அழுகையை நிறுத்த இயலவில்லை. மாறாக அவரது அழுகை இன்னமும் அதிகரித்தது. தாங்கவொண்ணாத அந்தத் துக்கத்தில் அவர் நிலை மறந்து காட்டிலுள்ள மரங்கள், ஜீவராசிகள் அனைத்திடமும் சீதா தேவி எங்கே



எங்கே என்று கேட்டார். கோதாவரி நதியினிடமும் பஞ்சாதவிக் காட்டினிடமும் கேட்டார். "ஓ பஞ்சாதவியே! நீ என் சீதையைப் பார்த்தாயா? அவள் எங்கேயிருக்கிறாள்? ஓ மான்களே, நீங்கள் என் சீதையைப் பார்த்தீர்களா? ஓ கோதாவரி நதியே, நீ என் சீதையைப் பார்த்தாயா? அவள் ஏன் என்னை விட்டுவிட்டுச் சென்றாள்?" இவ்வாறு, பைத்தியம் பிடித்ததுபோல் ஒவ்வொருவரிடமும் கேட்டார். அவரால் துக்கத்தைத் தாங்க முடியவில்லை.

அதே சமயம் சிவபெருமானின் மனைவியான சக்தி (பார்வதி தேவி) அந்த தண்ட காரண்ய வனத்துக்கு வந்தாள். சிவபெருமானோ, இராமர் நடத்தும் அனைத்து லீலைகளையும் சாட்சியாக கண்களால் கண்டு புளகாங்கிதம் அடைவார். அதேபோல் இப்போது ஸ்ரீ இராமர் சீதாதேவியின் பிரிவால் அழுதது அவரது இதயத்தை உருக்கியது. உடனே தரையில் தன் எல்லா அங்கங்களும் படுமாறு விழுந்து ஸ்ரீ இராமருக்கு நமஸ்காரம் செய்தார். "ஓ! உமது லீலைகள் எவ்வளவு உருக்கமாக உள்ளன. இதை எவரொருவர் கேட்டாலும் அவர்களுடைய இதயங்களை உருக்கியேவிடும்!" என்று கூறி ஸ்ரீ இராமரை தூரத்தில் நின்று அவரைச் சுற்றியுள்ள வனப் பகுதி வழியாக வலம் வந்து வணங்கினார். மேலும், பக்திப் பரவசத்தால் தானும் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தார்.

இவ்வாறு சிவபெருமான் ஸ்ரீ இராமரை வணங்கி பின்னர் தன் உறைவிடமான கைலாசத்துக்குத் திரும்பச் செல்ல ஆரம்பிக்கும் சமயம்தான் சக்தி (பார்வதி தேவி) அங்கே தோன்றினாள். தன் கணவன் யாரை இவ்வாறு வணங்குகிறார் என்பது புரியாமல், "என் கணவரே, யாருக்கு இப்படி விழுந்து வணக்கம் செய்கிறீர்?" என்று சிவபெருமானிடம் கேட்டாள். அதற்கு சிவபெருமான், "ஸ்ரீ இராமர் என் வணக்கத்திற்குரிய இறைவன். நான் அவரை எப்போதும் வணங்குவேன்" என்றார். பார்வதி தேவிக்கு அதை நம்ப முடியவில்லை. "இந்த இராமரோ ஒரு சாதாரண மனிதனைப் போல், தன் மனைவியின் பிரிவால் அழுது புலம்பிக் கொணடிருக்கிறார். கேவலம், எனக்குக் கூட சீதா தேவி இருக்கும் இடம் நன்றாகத் தெரியும். ஆனால் இந்த இராமருக்குத் தெரியவில்லையே! தவிர, மனைவியின் பிரிவுக்காக இப்படியா அழுவது? இவர் ஒரு பலம் குன்றிய மனிதராக இருக்கிறார். மேலும் இவருக்கு சீதாதேவியைத் திரும்பக் கொண்டு வர வேண்டிய பலமாவது உள்ளதா? அதுவும் இல்லை. எனவே, நிச்சயமாக இவர் ஒரு சாதாரண மனிதனேதான். இறைவன் அல்ல. ஏன் நீங்கள் இவ்வாறு வணங்க வேண்டும்?" என்று சிவபெருமானைக் கேட்டாள்.

சக்திதேவி கேட்ட கேள்விகளுக்கு சிவபெருமான் உடனே, "நீ ஒன்றும் தெரியாதவள்! உனக்கு ஸ்ரீ இராமர்தான் அந்தப் பரம

இறைவன் என்பது புரியவில்லை" என்று பதிலளித்தார். மேலும் அவர் சக்தியிடம், "வேண்டுமானால் நீயே ஏதாவது பரீட்சை செய்து கண்டுகொள்" என்று கூறி விட்டு சிறிது தூரத்திலிருந்த ஆல மரத்தின் கீழ் சென்று அமர்ந்தார்.

சக்தி தேவி, தன் கணவருக்குத் தெரியாமல் தனது பெரும் சக்தியால் சீதா தேவியாக உருவெடுத்து, சீதாதேவியின் பிரிவால் அழுது கொண்டிருந்த ஸ்ரீ இராமச்சந்திரரின் முன் சென்றாள். "எப்படியும் என்னைச் சீதா தேவிதான் என்று எண்ணி அணைத்துக் கொள்ளப் போகிறார். சீதா கிடைத்துவிட்டாள் என்று நம்புவார்!" என்று எண்ணிக் கொண்டு இராமர் முன்பு செல்ல, இராமரோ சீதாதேவியின் வடிவில் வந்திருந்த பார்வதியை விட்டு ஒதுங்கினார். பார்வதி தேவி பலமுறை முயன்றும் இராமர் வேறு பக்கமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். கடைசியாக இராமரே பார்வதி தேவியிடம், "அம்மா, நீங்கள் ஏன் இந்த வனத்தில் தனியாக உலாவுகிறீர்கள். உங்கள் கணவரான சிவபெருமான் எங்கே?" என்று கேட்டார்.

இதைக் கேட்ட சக்தி (பார்வதி) திடுக்கிட்டாள். மிக ஆச்சரியமும் பயமும் கொண்டாள். "எப்படி என்னை, சீதா அல்ல என்றும், நான் பார்வதிதான் என்றும் இவருக்குத் தெரிந்தது" என்று தன்னையே கேட்டுக் கொண்டு, இராமருக்கு தலைகுனிந்து தன் வணக்கத்தைத் தெரிவித்தாள். அப்போது என்னே ஆச்சரியம்! எல்லா மரங்கள், செடிகள், கொடிகள், மிருகங்கள், பறவைகள் இப்படி எதிலும் "சீதா-ராம்" வீற்றிருப்பதைக் கண்டாள்! இங்கே, அங்கே, இப்படி எங்கெல்லாமோ பார்த்தாள்! அனைத்திலும் சீதா-ராம், சீதா-ராம், சீதா-ராம்! எங்கும் இருவருமாக நிறைந்திருந்தனர்!

ஸ்ரீ ராமர், தானும் சீதா தேவியும் ஒருபோதும் பிரிந்திருக்க மாட்டோம் என்பதையும், தற்போது உலக மக்களின் நன்மைக்காக இப்படி லீலைகளை நிகழ்த்துவதையும் புரிய வைத்தார். தானே எங்கிலுமிருக்கும் பரம இறைவன் என்பதை சக்திதேவிக்கு உணரவைத்தார். "என் கணவருக்கு உண்மையில் எல்லாம் தெரிந்துள்ளது. ஆனால் நான்தான் முட்டாள்" என்று தன்னையே நொந்தவாறு எழுந்து நடந்தாள். அந்தக் காட்டினுள் இலட்சுமணனுடன் சேர்ந்து ஸ்ரீ இராமர் சீதா தேவியின் பிரிவினால் கதறி அழுவது பின்னர் கேட்டுக் கொண்டேயிருந்தது! "ஓ சீதா, நீ எங்கே போனாய்? எங்கே இருக்கிறாய்?"

சக்திக்கு இப்போது எல்லாம் மிகத் தெளிவாகப் புரிந்தது. தன் சுய ரூபத்துக்குத் திரும்பி, தூரத்தில் ஆலமரத்தின் கீழ் அமர்ந்திருந்த தன் கணவரை நோக்கி நடந்தாள். சிவபெருமான் சக்தியிடம், "நீ இராமரை பரீட்சித்து அவர் யார் என்பதைக் கண்டு கொண்டாயா?" என்று கேட்டார்.



அதற்கு பார்வதி தேவியோ பொய் ஒன்றை பதிலாகக் கூறினாள்! "என் பெருமை மிக்க கணவரே, நான் உம்மை முழுவதுமாக நம்பினேன். எந்த பரீட்சையும் தேவையில்லை" என்று பொய் சொன்னாள்.

அப்போது சிவபெருமான் தன் சக்தியால் உண்மையில் என்ன நடந்தது என்பதை அறிந்து கொண்டார். நடந்ததை அவரால் நம்ப முடியவில்லை! அக்கணமே தன்னுள் ஓர் உறுதி எடுத்துக் கொண்டார், "இவள், என் அம்மாவான சீதாபிராட்டியின் வடிவத்தை எடுத்ததால், எனக்கு சக்தி இனி மனைவியல்ல. இப்போதிலிருந்து அவளை என் தாயாகவே நடத்துவேன்!"

சிவபெருமான் இவ்வாறு சபதம் எடுத்ததைக் கேட்ட தேவர்கள் தேவலோகங்களிலிருந்து மலர் மாரி சொரிந்தனர். அவர்கள், "எம்பெருமானே, தாங்கள் மிகத் தகுந்த சபத்தை எடுத்துள்ளீர்கள்!" என்று துதித்தனர்.

அப்போது சக்தி தேவி "என்ன சபதம் எடுத்தீர்கள்?" எனக் கேட்டாள். சிவபெருமானோ ஒன்றும் கூறாமல் மௌனம் சாதித்தார்.

ஒரு நல்ல சிஷ்யனுக்கு எப்போதும் தன் குருவிடம் அசைக்க முடியாத நம்பிக்கையிருக்கும். சக்திதேவிக்கு சிவபெருமான் குரு போன்றவர். ஆனால் அவர் இராமரே அந்தப் பரம இறைவன் என்று அவளிடம் கூறிய போதும் கூட சக்தி அதை நம்பவில்லை. ஒரு சிஷ்யன் தன் குருவின் சொல்லைக் கேட்கவில்லையானால் அவனது பக்தி அழிந்து போகும்! மேலும், சிஷ்யன் தன் குருவினிடம் பொய் சொன்னால் அவன் கண்டிப்பாக நரகமே செல்வான் என்று சாஸ்திரம் கூறுகிறது.

சிவபெருமானும் சக்திதேவியும் தங்கள் உறைவிடமான கைலாசத்தை அடைந்ததும், அவர் சக்தி தேவியை தனக்கு நேர் எதிரில் உட்கார வைத்தார். வேத சாஸ்திரங்களின்படி மனைவியை ஒருவன் தனக்கு இடது பக்கத்திலும், தாயை தன் குரு மாதிரி தன் முன்புதான் உட்கார வைக்க வேண்டும். அதாவது தாய் தனது மகனை நேரடியாகப் பார்க்கும் வண்ணம் உட்கார வைக்க வேண்டும்.

ஒரு சிஷ்யன் ஒருபோதும் குருவுக்கு இடமோ வலமோ இருந்து வணக்கத்தைச் செலுத்தக் கூடாது. நேராக மட்டுமே வணக்கத்தைச் செலுத்த வேண்டும். மேலும், ஒரு உண்மையான சிஷ்யன் மௌனமாக இல்லாமல் வேண்டிய கேள்விகளை குருவிடம் கேட்டு அறிந்து கொண்டு சேவை செய்து கொண்டேயிருப்பான். அவன் குருவிடம் தர்க்கமோ போட்டியோ போடமாட்டான். இதைப் பற்றி பகவத் கீதையில் (4.34) குறிப்பிடப்பட்டுள்ளது:

தத் வித்தி பிரணி பாத்தேன
பரி பிரஸ்னேன ஸேவயா
உபதேக்ஸியந்தி தே ஞானம்
ஞானினஸ் தத்வ தர்ஸினா.

"ஆத்ம ஞானத்தை ஒரு சிறந்த குருவிடமிருந்து அறிந்துகொள். குருவிடம் நீ தாழ்மையுடன் வணங்கி கேட்டறிந்து அவருக்கு பணிவிடைகளும் செய். முற்றுமுணர்ந்த குரு உனக்கு ஞானத்தை வழங்க முடியும், ஏனென்றால் அவர் பரம உண்மையை நேரில் கண்டவர்".

சிவபெருமான் பின்னர் சமாதியில் மூழ்கினார். ஆயிரக்கணக்கான வருடங்கள் கடும் தபசில் உட்கார்ந்திருந்தார். இதைக்கண்ட சக்தி தேவி மிகவும் கவலைப்பட்டாள். "சிவபிரான் என்னைக் கைவிட்டு விட்டார். நான் சீதாவின் உருவத்தை எடுத்ததால் என்னை அவர் தாய் என்ற ஸ்தானத்தில் வைத்துவிட்டார்! இனி நான் இந்த உடலில் இருக்கும் வரை அவர் என்னை மனைவியாகக் கொள்ள மாட்டார். எனவே நான் இந்த உடலை விட்டே ஆக வேண்டும்" என்று உறுதி கொண்டாள்.

சக்தியின் தகப்பனும், பிரம்ம தேவரின் மகனுமான தக்ஷன் பெரிய யாகம் ஒன்றை நடத்தினான். சாதாரணமாக எல்லா யாகங்களிலும் அனைத்து தேவர்களுடன், முக்கியமாக பிரம்மா, விஷ்ணு, சிவன் அனைவரையும் அழைப்பார்கள். ஆனால் இந்த யாகத்துக்கு தக்ஷன் சிவபெருமானுக்கு அழைப்பு அனுப்பவில்லை.

கற்புள்ள சக்தி (பார்வதி தேவி), சொர்க்கலோகங்களிலுள்ள அனைத்து தேவர்களும் தத்தம் மனைவிகளுடன் விமானங்களில் பறந்து தன் தந்தை தக்ஷனின் பெரும் யாகத்துக்குச் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவர்கள் அனைவரும் ஜொலிக்கும் நகைகளுடன் அழகழகான துணிமணிகளையும் அணிந்து கொண்டு ஒவ்வொரு திசையிலிருந்தும் விமானங்களில் பறக்கும் காட்சி அவளைக் கவர்ந்தது. சிவபெருமானுக்கும் சக்திக்கும் அழைப்பு இல்லையென்று தெரிந்தும் அவள் தன் கணவனை அணுகி, "என் இறைவனே! உங்கள் மாமனார் மிகப்பெரிய யாகத்தை நடத்துகிறார். அழைக்கப்பட்ட எல்லாத் தேவர்களும் செல்கிறார்கள். நீங்கள் சரியென்று சொன்னால் நாமும் போகலாமே!" என்ற கேட்டாள்.

சிவபெருமான் சக்தியைப் போக வேண்டாமென்று தடுத்தார். தக்ஷனுக்கும் சிவபெருமானுக்கும் இடையில் முன்பே பகை இருந்தது. அது இப்போது சிவபெருமானுக்கு ஞாபகம் வந்தது. தக்ஷன் தேவசபையில் எல்லோருக்கும் முன்பாக தன்னை மிகவும் மோசமாக வசைபாடியது அனைத்தும் கண் முன் நடப்பது போல் ஞாபகத்திற்கு வந்தன. தக்ஷனின் மகளான சக்தி(பார்வதி)யை சிவபெருமான் திருமணம் செய்ததால் தக்ஷன் சிவபெருமானை தன் மகன் போன்று எண்ணினான். தேவசபையில் தக்ஷன் தன் தந்தையான பிரம்மதேவர்



முதல் எல்லாத் தேவர்களுக்கும் மரியாதை கொடுத்தான். ஆனால் சிவபெருமானுக்கு மரியாதை எதுவும் அவன் கொடுக்கவில்லை. சிவபெருமானோ தன் ஆழ்ந்த தியானத்தில் மகா மந்திரத்தை "ஹரே கிருஷ்ணா ஹரே கிருஷ்ணா, கிருஷ்ணா கிருஷ்ணா ஹரே ஹரே, ஹரே ராமா ஹரே ராமா, ராமா ராமா ஹரே ஹரே" என்று உச்சரித்துக் கொண்டிருந்தார். சபையிலுள்ள அனைவரும் எழுந்து தக்ஷனுக்கு தங்கள் மரியாதையை அளித்தனர். சிவபெருமானோ தியானத்தில் உட்கார்ந்திருந்தார்.

சிவபெருமான் தனக்கு மரியாதை செலுத்தவில்லை என்பதை அறிந்த தக்ஷன், வெகு சினமடைந்தான். சிவபெருமானை எல்லோர் முன்பாகவும் அந்தத் தேவத் திருச்சபையில் வசை பேசினான். இதைத் தொடர்ந்து மேலும் பல சம்பவங்கள் நடந்தன. சிவபெருமானோ தனது கைலாசத்துக்குத் திரும்பினார். தன் மகள் சக்தியை ஒரு தகுதியற்றவனுக்கு தவறாக மணம் செய்து கொடுத்ததாக அடிக்கடி சிவபெருமானை வசை பேசுவது தக்ஷனின் வழக்கம். ஆனால் இந்த சம்பவத்துக்குப் பின், தக்ஷன் சிவபெருமானை தன் பகைவனாக எண்ணினான். ஆனால் சிவபெருமானோ தக்ஷனின் பேரில் எந்தப் பகைமையும் கொள்ளவில்லை.

சக்தியிடம் சிவபெருமான் கூறினார், "ஒரு பெண் தன் குருவையோ அல்லது தன் தாய் தந்தையர்களையோ பார்க்க அழைப்பு எதுவுமின்றி செல்லலாம். ஆனால் அவளது தகப்பனார் தன் கணவனை எதிரியாக நினைத்தால் அவள் அங்கு செல்லக்கூடாது. உன் தந்தை என்மேல் பகைமை காட்டுவது உனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் எனக்கு உன் தந்தையிடம் பகை எதுவுமே கிடையாது. எனவே நீ அங்கு செல்வது சரியல்ல! என்று அறிவுரை கூறினார்.

ஆனால் சக்தி, தன் கணவர் கூறியதைக் கேட்கவில்லை. மாறாக, தான் மட்டும் தனியே தன் தந்தையைப் பார்க்கச் சென்றாள். சக்தியைக் கண்டதும் தக்ஷன் சிவபெருமானைப் பற்றிச் சொல்லவொண்ணாவிதம் வசை பேசினான். இதைப் பொறுக்க இயலாத சக்தி, அளவற்ற கோபம் கொண்டு தன் தந்தையைக் கடிந்து பேசி, அதே சமயம் தன் கணவரைப் பற்றி எல்லோர் முன்பும் மிகப் புகழ்ந்து பேசினாள். அது மட்டுமின்றி அவள் அங்கேயே தன் கணவரின் பாதங்களை நினைத்துக் கொண்டு, தன் இதயத்திலிருந்து அக்னியை வரவழைத்து தன் உடலை எரித்து விட்டாள்!

சக்தி தன்னை தன் உடலிலிருந்தும், தன் கொடுமையான தந்தையிடமிருந்தும் பிரித்ததால் இப்போது புனிதமான இன்னொரு உடலை எடுக்க முடிந்தது. அடுத்த பிறவியில் இமயமலையின் மகளாக பார்வதி என்ற பெயரில் உருவெடுத்தாள். பின் அவள் நீண்ட காலமாக தபசு இருந்து சிவபெருமானைத் தன் கணவராக திரும்பவும் மணம் புரிந்து கொண்டாள்.

இங்கே நாம் காண்பதென்னவென்றால் சிவபெருமான் ஸ்ரீ இராமரை இறைவனாக வழிபட்டார் என்பதே. அவரது மனைவி சக்தி, சீதா தேவியாக வடிவம் எடுத்த காரணத்தால் அவர் தன் மனைவியை விட்டே விலகிவிட்டார். சிவபெருமான் ஒரு மிகச் சுத்தமான வைஷ்ணவர். அவர் ஸ்ரீ கிருஷ்ணரையும் ஸ்ரீ இராமரையுமே எப்போதும் வழிபடுபவர். சக்தியும் ஒரு சுத்த பக்தையே. அவள் பரம இறைவனின் தெய்வீக சக்தி. சாதாரண மனிதர்களுக்கு அறிவுரை தருவதற்காகவே இவ்வாறு நாடகம் நடத்துகிறார்கள்.

அது மட்டுமின்றி சிவபெருமானும் சக்தியும் ஸ்ரீ இராமச்சந்திரரின் மனித ரூப லீலைகளில் பங்கெடுத்துக் கொண்டனர். இராவணன் உண்மையான சீதா தேவியை எடுத்துச் செல்லவில்லை! அவனால் உண்மையான சீதையைத் தொட முடியாது! ஒரு மாய சீதாவையே அவன் கொண்டு சென்றான். உண்மையான சீதா தேவியை அக்னிதேவன் மறைத்து பாதுகாப்பாக வைத்திருந்தான். எனவே ஸ்ரீ ராமர், "என் சீதா எங்கே?" என்று அழுது மரங்களிடமும், செடிகொடிகளிடமும், மலை, நதிகளிடம் கேட்டது அவரது மனித ரூப லீலையே.

மிகவும் புகழ்பெற்ற துளசிதாசர், தன் ஸ்ரீ ராம சரித மானஸா என்ற நூலில் ஸ்ரீ பார்வதி தேவியை நாம் குருவாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், அவ்வாறு எடுத்துக் கொண்டால் அவர்கள் நமக்கு ஸ்ரீ இராமச்சந்திரரின் கமலப்பாதங்களின் மேல் பக்தி உண்டாக உதவுவார்கள் என்றும் எழுதியுள்ளார். எவரொருவர் சிவபெருமானை தனியாக வழிபடுகிறாரோ, அவர் விருக்காசுரன் போன்ற அசுரனேயாகும். அவர்கள் தன் சுயநலத்திற்காகவும், இந்திரிய ஆசைகளைத் திருப்தி செய்யவுமே ஸ்ரீ கிருஷ்ணரின் சக்தித் தத்துவங்களை வழிபடுகிறார்கள். எனவே நாம் விருக்காசுரனாக ஆகாமல் சுத்த பக்தர்களாகி, சிவபெருமானையும் பார்வதி தேவியையும் நம் குருக்களாகக் கொள்ள வேண்டும்.

இனி, சிவபெருமான் உச்சரிக்கும் மூல மந்திரம் என்னவென்று பார்ப்போம். சிவபெருமான் எப்போதும் "ராமா" என்ற மந்திரத்தை உச்சரிப்பதாக நாம் அறிகிறோம். இந்த மந்திரம் யாரைக் குறிக்கிறது? இந்த மந்திரம் 'சீதாராமை' குறிப்பதுபோல் தோன்றினாலும் அவர் உண்மையில் உச்சரிப்பது மூல சங்கர்ஷணரான பலராமரையேயாகும். ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து பிறந்த முதன் முதல் அம்சம்தான் மூல சங்கர்ஷணர். ஸ்ரீ இராமச்சந்திரரும் இந்த மூல ராமாவான பலராமரிடமிருந்து வந்தவரே. சரியாகக் கூறுவதாக இருந்தால் சிவபெருமான் வணங்கும் இறைவன் பலராமர்.

இன்னும் குறிப்பிடப் போனால், ஹரே கிருஷ்ணா மகாமந்திரத்தில் வரும் "ராமா" தசரதரின் மைந்தரான இராமச்சந்திரரையோ, பரசுராமரையோ அல்லது பலராமரையோ குறிப்பிடவில்லை. இராமச்சந்திரர், பரசுராமர், பலராமர் இவர்கள் அனைவரும் ஸ்ரீ ராதாரமணா என்னும் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து தோன்றியவர்களே!



ஹரே கிருஷ்ணா ஹரே கிருஷ்ணா
கிருஷ்ணா கிருஷ்ணா ஹரே ஹரே
ஹரே ராமா ஹரே ராமா
ராமா ராமா ஹரே ஹரே.

இந்த மகாமந்திரத்தில் வரும் 'ராமா', ராதாரமணரான ஸ்ரீ கிருஷ்ணரையே குறிக்கிறது. ரமணா என்றால் லீலைகள் புரிந்து ஆனந்தமாக விளையாடுபவர் என்று பொருள். ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்ரீமதி ராதா ராணியுடன் ரமணமான லீலைகள் புரிவதைத்தான் அது குறிக்கிறது. எனவேதான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு ரமணா அல்லது ராமா என்றும் பெயர்.

## காம இச்சையற்றவர் சிவபெருமான்

இதுவரை நாம் ஐஸ்வர்ய கத விசாரம் மற்றும் நரவத-கத விசாரங்கள் மூலமாக சிவபெருமானைப் பார்த்தோம்.

இனி எவ்வாறு நாம் அவரை மற்ற விதமான தத்துவங்கள் வாயிலாகவும் அறிய முடியும் என்று பார்ப்போம். கீழ்க்கண்ட சரித்திரம் மதுரிய-கத-விசாரம், நரவத-கத-விசாரம் இவைகளுடன், தத்துவ-கத-விசாரமும் சேர்ந்தது.

சிவபிரான் மிக மிகச் சக்தி வாய்ந்தவர். அவர் பூவுலக சம்பந்தமான காம இச்சைகளுக்கு அப்பாற்பட்டவர். சிலசமயங்களில் அவர் ஆடை எதுவுமின்றி அவரது மனைவி பார்வதி தேவியை தன் மடியில் வைத்துக் கொண்டிருப்பார். ஆனால் அவர்களுக்கு காம இச்சை கிடையாது. பூவுலகத்தில் ஒரு யுவனும் யுவதியும் இவ்வாறு இருந்தால் மாயையின் வலையால் அவர்களது இதயங்களில் உடனே காம இச்சை புகுந்து விடும். ஆனால் சிவபெருமான் பார்வதியின் இதயங்களில் எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்த மாதிரி காம இச்சை கிடையாது.

இதைப் பற்றி மகா புராணமான ஸ்ரீ மத் பாகவதத்தில் ஆறாவது காண்டத்தில் ஒரு சரித்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது. சிவபெருமான் ஒரு சமயம் ஒரு பெரிய தேவ சபையில் மகா பெரும் முனிவர்களுக்குச் சொற்பொழிவு ஒன்றை வழங்கிக் கொண்டிருந்தார். பார்வதி தேவி அவரது மடியில் உட்கார்ந்திருந்தாள். ஆனால் இருவரும் தன் மேல் ஆடை எதுவுமின்றி இருந்தனர். அதே சமயம் ஒரு பெரும் பக்தனான சித்ரவாகு என்ற மன்னன் சிவபெருமானிடம் நெருங்கி, ஒரு நண்பன் அறிவுரை கொடுப்பது போல், "சிவபிரானே, நீர் எந்தவிதமான நிலையிலிருந்து சொற்பொழிவை அளிக்கிறீர் என்று தயவு செய்து பார்த்துக் கொள்வீராக" என்று கூறினார். ஆனால் பக்கத்திலிருந்த பார்வதி தேவியோ அந்த மன்னன் சிவபெருமானைக் கேலி செய்வதாக நினைத்தாள். அவர்கள் உட்கார்ந்திருந்த நிலையை மற்றவர்களும்

பார்த்து சிவபெருமானை காம இச்சையில் அடிமையானவர் என்றல்லவா தப்பான எண்ணம் கொள்வார்கள் என்று குழம்பி, அந்த மன்னனுக்கு அவள் சாபம் கொடுத்து விட்டாள்.

சித்ரவாகு மன்னனோ சிவபெருமானிடம் மிகுந்த நட்பு உள்ளவர். அவரது குருவும் சிவபெருமானின் குருவும் மூல சங்கர்ஷணரேயாகும். எனவே அவர்கள் இருவரும் இறைவ சகோதரர்கள். சிவபெருமானின் இதயத்தில் காம இச்சை கிடையாது என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் சொற்பொழிவு வழங்க இது சரியான நிலை அல்ல என்பதைத்தான் அவர் எடுத்துக் கூறினார்.

சிவபெருமான் பார்வதி தேவி மேல் கோபமடைந்து, "ஏன் நீ சித்ரவாகுவைச் சபித்தாய்? அவன் ஒரு சிறந்த பக்தன். அவனுடைய பக்தியின் சிறப்பைப் பார்! அவனால் நீ கொடுத்த சாபத்தை முறிப்பது மட்டுமின்றி பதிலுக்கு உனக்கும் பதில் சாபம் கொடுக்க முடியும். இருந்தும், நீ கொடுத்த சாபத்தை அவன் ஏற்றுக் கொண்டான். இது தான் அவனது பெருந்தன்மை! ஒரு வைஷ்ணவனுக்குள்ள நற்குணங்களில் ஒன்று" என்று பாடம் கற்பித்தார்.

காம இச்சை சிவபெருமானின் பக்கத்தில் கூட இருக்க முடியாது. சிவபெருமானின் மூலமான சதாசிவரிடமோ அல்லது சதாசிவரிட மிருந்து தோன்றி பார்வதி தேவியுடன் சேர்ந்திருக்கும் சிவபெருமா னுக்கோ பூவுலக காம இச்சை கிடையாது. காமதேவன் ஒரு சமயம் அவரது தியானத்தை முறிக்க முயன்றபோது அவர் தனது மூன்றாவது கண்ணினால் காமதேவனை எரித்துச் சாம்பலாக்கினார்.

ஆனால் இதே சிவபெருமான் ஒரு சமயம் ஏன் மோகினியின்பால் காம இச்சையால் ஈர்க்கப்பட்டார் என்பது சிறிது ஆராயத்தக்கது. ஸ்ரீ கிருஷ்ணரின் ஒரு அவதாரமே மோகினி. பரம இறைவன் என்ன வேண்டுமானாலும் அவர் விருப்பப்படி செய்யலாம். மோகினி அவதாரத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் சிவபெருமானின் இதயத்தில் காம இச்சையை வேண்டுமென்றே புகுத்தினார். அவரது லீலைகளில் அதுவும் ஒன்று. மேலும், ஸ்ரீ கிருஷ்ணரின் அந்தரங்க சக்திகளில் ஒன்றான யோக மாயை மிக மிக சக்திவாய்ந்தவள். மகா மாயையை பக்தியுடன் எளிதாக வென்றுவிடலாம். ஏனென்றால் அவள் பூத-பூவுலக சம்பந்தமான கீழ்நிலையிலுள்ள (inferior) சக்தியே. ஆனால் யோக மாயையோ ஆன்மீக உலகத்தைச் சார்ந்தவள். யோக மாயையை எவராலும் அறியவோ வெல்லவோ முடியாது. அவள் ஸ்ரீ கிருஷ்ணரின் தித்திக்கும் லீலைகளுக்கு மட்டுமே உதவுவாள். மோகினி அவதாரத்தில் சிவபெருமான் அந்த யோக மாயையினால்தான் ஆட்கொள்ளப் பட்டார்!



# அத்தியாயம் – 4
## புனித அன்புபுரியின் வாயிற் காவலன்

*(அக்டோபர் 2001 இல் ஸ்ரீல நாராயண மகாராஜாவுடன் சுமார் இருநூறு மேற்கத்திய தேச பக்தர்களும் அடங்கிய மொத்தம் அறுநூறு பக்தர்கள் ஒரிஸ்ஸாவிலுள்ள பூரி ஜகன்னாதர் கோயிலுக்குப் புனித யாத்திரை சென்றனர். அந்த யாத்திரையில் லோகநாத மகாதேவர் என்ற பெயரில் இருக்கும் சிவபெருமானின் கோயிலும் ஒன்று. ஒரு வாயில் கதவைத் தாண்டி உள்ளே சென்றால் அங்கே ஒரு முற்றமும் அழகான சிறிய குளமும் உள்ளது. இடது பக்கத்தில் பூஜைக்கு வேண்டிய பொருட்களை விற்கும் கடைகள் வரிசையாக உள்ளன.*

*அங்குள்ள கோயில் விதிமுறைப்படி, மேற்கத்திய பக்தர்களைக் கோயிலினுள் அனுமதிக்கவில்லை. எனவே ஸ்ரீல நாராயண மகாராஜாவும் இந்திய பக்தர்களும் உள்ளே சென்று லோகநாத மகாதேவரைத் தரிசித்தார்கள். ஆனால் சில நிமிடங்களில் ஸ்ரீல நாராயண மகாராஜா வெளியே வந்து மேற்கத்திய பக்தர்களிடம் அமர்ந்தார். ஆவலுடன் அனைவரும் அவரைச் சுற்றி அமர்ந்தனர். அங்கு அவர் அளித்த மிகச்சிறிய சொற்பொழிவே இந்த அத்தியாயம்).*

ஸ்ரீ கிருஷ்ணரின் மிகப் பெருமை வாய்ந்த பக்தர்களில் ஒருவரே சிவபெருமான். அவர், ஸ்ரீ கிருஷ்ணருக்கும் அவரது அவதாரங்களான இராமச்சந்திர பகவான், நரசிம்ம பகவான் மற்றும் கல்கி, வராஹ பகவான்கள் அனைவருக்கும் எப்போதும் திட நம்பிக்கையுடன் சேவை செய்வார்.

இந்தப் பூவுலகில் சிவபெருமான் ஐந்துவிதமான வடிவங்களில் உள்ளார். அவை பூமி, நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகும். இவைகளால்தான்

நம் உடல் மற்றும் உலகங்களும் ஆக்கப்பட்டுள்ளன. மேலும் சிவபெருமான் அவரது இறைவனுக்குச் சேவை செய்ய எந்த வடிவத்திலும் வருவார்.

உன்னால் இந்த ஐந்து பூதங்களைத் தவிர எதையுமே காண இயலாது. உன் சொந்த உயிரைக் கூட உன்னால் காண முடியவில்லை. ஆனால் ஸ்ரீ கிருஷ்ணரிடம் பரிசுத்தமான பக்தி கொண்டால், அவரை உன்னால் காண முடியும். அவர் அளிக்கும் வெளிச்சத்தால் பின்னர் நீ உன் உயிரையும் காண முடியும்!

நாங்கள் கோயிலின் உள்ளே சென்றோம். ஆனால் அங்கு ஓர் அறையில் வெறும் நீர் மட்டுமே உள்ளது. எனவே நீங்கள் உள்ளே செல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இங்கே நீங்கள் பார்க்கும் கௌரி-குண்டம் சிவபெருமானின் ஒரு தெய்வ அம்சமாகும். இந்தத் தீர்த்தத்தை நீங்கள் தொடலாம், ஆச்சமனமாகப் பருகலாம். மற்றும் சாஷ்டாங்கமாக விழுந்து வணக்கங்களைச் செலுத்தி வழிபடலாம். இந்தியாவில் வங்காள பகுதிகளில் சிவபெருமானை அம்பு லிங்கமாக, அதாவது தண்ணீர் லிங்கமாக வழிபடுகிறார்கள்.

இந்திய பக்தர்கள் லோகநாத மகாதேவரின் கோயிலினுள் சென்று சிவபெருமானுக்கு ஆரத்தி வழங்குவார்கள். ஆனால் மேற்கத்திய நாடுகளிலுள்ள பக்தர்கள், உள்ளே செல்ல அனுமதி இல்லாததால் அவர்கள் தாழ்மையுணர்ச்சியுடன் சிவபெருமானை இங்கே வெளியே நின்று வழிபடுகிறார்கள். சொல்லப்போனால் இவர்கள்தான் உள்ளே செல்ல முடிந்த பக்தர்களை விடவும் மேலானவர்கள்! நீங்கள் இங்கிருந்து, "லோகநாதா! கோபீஸ்வர மகாதேவா, தயவு செய்து என்னிடம் கருணை காட்டுவீராக!" என்று உருக்கமாகக் கதறி அழுதால் அவர் கண்டிப்பாக உங்கள் மேல்தான் முதலாவது அவரது அருளைப் பாலிப்பார். சிவபெருமான் ஸ்ரீ கிருஷ்ணரின் ஓர் அம்சமே. எனவே அவர் எப்போதும் அன்புப் பசியுள்ளவர். அவரிடம், "நான் நற்பேறு அற்றவன்!" என்று கதறினால், ஸ்ரீ கிருஷ்ணர் தானே நேராக உன்னிடம் வருவார்! அவர் மிகவும் கருணையுள்ளவர். எனவே உங்களால் கோயிலின் உள்ளே செல்ல முடியவில்லை என்று கவலைப்படாதீர்கள். சொல்லப்போனால் நீங்கள்தான் மிகவும் புண்ணியம் செய்தவர்கள்.

எங்கெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணர் இருப்பாரோ அங்கெல்லாம் சதாசிவ விஷ்ணுவும் உடனிருப்பார். உதாரணமாக மதுராவிலும் மற்றும் எங்கெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணரோ அல்லது எந்த விஷ்ணு வடிவங்களுக்குக் கோயில் இருக்கிறதோ, அங்கெல்லாம் சதாசிவன், லோகநாதர் அல்லது கோபீஸ்வர மகாதேவர், இப்படிப் பல பெயர்களில் தோன்றி அவரது



பரம இறைவனுக்கு சேவை செய்கிறார். அவர் கைலாசத்தில் இருக்கிறார், காசியில் இருக்கிறார், புவனேஸ்வரத்தில் இருக்கிறார். இவ்வாறு எங்கெங்கிலுமிருந்து ஸ்ரீ கிருஷ்ணருக்குச் சேவை செய்கிறார். மேலும் நம் ஊன அறிவுக்கு அவர் ஒவ்வொரு இடமாக மாறி மாறிச் செல்வதுபோல் தெரியும். ஆனால் அது ஒரு வகையில் சரியான உண்மையல்ல!

அவரது லீலைகளில்தான், தன் உறைவிடத்தைக் கைலாசத்திலிருந்து காசிக்கு மாற்றினார். காசியில் அவர், தன் பக்தனான காசிராஜனுக்கும், போலி கைகளுடன் தான் மட்டுமே உண்மையான வாசுதேவர் என்று பறைசாற்றி கிருஷ்ணரிடம் போர் புரிந்த பௌண்ட்ரகாவுக்கும் உதவி செய்தார். ஆனால் போரிலோ ஸ்ரீ கிருஷ்ணர் இருவரது தலைகளையும் கொய்தார். காசி மன்னனும் பௌண்ட்ரகாவும் சிவபெருமானின் சிறந்த பக்தர்களாக இருந்தாலும், அவருக்கும் மேலான பரம இறைவனின் முன்பு அவர்களால் ஒன்றுமே செய்ய இயலவில்லை. மேலும் காசிப்பட்டணம் முழுவதையும் ஸ்ரீ கிருஷ்ணரின் சக்கராயுதம் எரித்துச் சாம்பலாக்கியது.

காசிப்பட்டணம் தீயில் சாம்பலாவதைக் கண்ட சிவபெருமான் வெளியேறி புவனேஸ்வரத்திலுள்ள "ஏகாம்ர கானனம்" என்ற இடத்துக்கு வந்தார். அங்குள்ள ஜகன்னாத பகவானிடம் சரணடைந்து அவரது ஆதரவில் இருந்தார். மேலும் ஜகன்னாதர், சிவபெருமானுக்கு லோகநாதர் என்ற பதவியை அளித்து தன் உறைவிடத்திற்கு பாதுகாவலராக நியமித்தார். எவர் தன்னைத் தரிசிக்க வந்தாலும் பின்னர் லோகநாதரையும் தரிசித்தால் மட்டுமே முழுபலன் கிடைக்கும் என்றும் அருளினார்.

சிவபெருமான் மிகவும் இளகிய மனமுள்ளவர். அளவற்ற கருணை உள்ளவர். அன்பின் உறைவிடம் அவர்! அவரைப்பற்றி ஸ்ரீல விஸ்வநாத சக்ரவர்த்தி தாக்கூரா, தன் ஸங்கல்ப கல்பத்ருமா (103) என்ற நூலில் பின்வருமாறு எழுதியுள்ளார்:

பிருந்தாவனாவனி பதே! ஜெய ஸோம ஸோம மௌலே
சனக்க சனந்தன சனாதன நாரதேத்ய
கோபீஸ்வரா! ப்ரஜ விலாஸி யுஹாங்க்ரி பத்மே
ப்ரேம பிரயச்ச நிருபாதி நமோ நமஸ்தே.

"ஓ, பிருந்தாவனத்தின் வாயிற் காவலனே! ஓ ஸோமா, உமக்கு என் துதிகள் உரித்தாகுக! உமது முன்னெற்றியைச் சந்திரன் அலங்கரிக்கிறான். உம்மை மகா ரிஷிகளான சனக்கர், சனந்தனர், சனாதனர் மற்றும் நாரதர்

அனைவரும் துதித்து வழிபடுகின்றனர். இனிமையான லீலைகள் புரியும் ஸ்ரீ ராதா-மாதவரின் பாதக்கமலங்களில் எனக்குப் பிரேம பக்தி வேண்டுமென்று உம்மை நான் துதிக்கிறேன். ஓ கோபீஸ்வரா, நான் உமக்குத் திரும்பத் திரும்ப நமஸ்காரம் செய்கிறேன்".

நாம் எப்படிப் பிரார்த்தனை செய்ய வேண்டும்? "சிவபிரானே, மகாமகா முனிவர்களான நான்கு குமாரர்களும் நாரத முனிவரும் உம்மை வழிபடுகிறார்கள். உம்மால்தான் எனக்கு, கோபியர்கள் ஸ்ரீ கிருஷ்ணரின் மேல் கொண்டது போன்ற பிரேமையைக் கொடுக்க முடியும். கோபீஸ்வர மகாதேவர் என்ற உம் மிகவும் உயர்ந்த சுத்த மூல வடிவில் நீர் மிகமிக சக்தி வாய்ந்தவர். நீவிர்தான் 'ஹரி ஹர ஏக ஆத்மா' - நீவிர் ஸ்ரீ கிருஷ்ணரின் ஆத்மா, அவர் உம் ஆத்மா".

இங்கு ஆத்மா என்பதற்கு 'மிகவும் நெருங்கிய அன்பு' என்று அர்த்தம். எனவே ஸ்ரீ கிருஷ்ணரும் சிவபெருமானும் இதயத்தில் ஒன்றே. சிவபெருமான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு ஹனுமானாகவும், பீமனாகவும், மத்வாச்சாரியாராகவும், மேலும் ஸ்ரீ சைதன்ய மகா பிரபு அவதரித்தபோது அவரே அத்வைத ஆச்சாரியராகவும் தோன்றினார். இப்படிப் பற்பல வடிவங்களில் அவர் தோன்றியுள்ளார்.

இங்கே நாம் லோகநாதரின் கருணையைப் பெற வந்துள்ளோம். ஆனால் நான் லோகநாதரைக் காணவில்லை. பதிலாக அவர் தோன்றியதற்கு மூலமான கோபீஸ்வர மகாதேவரையே காண்கின்றேன்!

இனி நான் சொல்வதைத் திரும்பச் சொல்லுங்கள்: (ஸ்ரீல நாராயண மகாராஜா பாதி பாதி வரியாக சமஸ்கிருத ஸ்லோகத்தைச் சொல்ல பக்தர்கள் அதைத் திரும்பச் சொன்னார்கள். இதோ அதன் விளக்கம்)

"ஓ கோபீஸ்வர மகா தேவா, நாங்கள் உம்மிடம் வந்துள்ளோம். இங்கே உம் பெயரை மாற்றி, லோகநாதராக அமர்ந்துள்ளீர். ஆனால் எங்களுக்கு உம்மை லோகநாதராகத் தெரியாது. உம்மை எங்களுக்குக் கோபீஸ்வர மகாதேவர் என்று மட்டுமே தெரியும்! நீவிர் எங்களை ஏமாற்ற முடியாது! இராவணன், கம்ஸன், ஜராசந்தன் இப்படிப்பட்டவர்களை ஏமாற்றுவீர். ஆனால் எங்களை ஒரு போதும் ஏமாற்ற மாட்டீர். ஏனென்றால் நாங்கள் யோக மாயையான பௌர்ணமாசியிடம் சரணடைந்துள்ளோம். எங்களை ஏமாற்றினால் நாங்கள் நேராக பௌர்ணமாசியிடம் சென்று முறையிட்டு விடுவோம். பின்னர் அவள் உம்மைத் தண்டித்து விடுவாள்! உமக்கு ஞாபகம் உள்ளதா? கோபியர்கள் அனைவரும் உம் கன்னங்களில் அறைந்து வீங்கியது; நீர் வலியால் துடித்ததை தயவு செய்து நினைத்துப் பார்ப்பீராக".



இவ்வாறு நாம் அவரைத் துதித்து வணங்கினால் அவர் மிகவும் மனமகிழ்ந்து கோபீஸ்வர மகாதேவராக வந்து அவரது அளவில்லா கருணையை வாரி வழங்குவார்.

லோக நாத மகாதேவருக்கு ஜெயம்!
ஸ்ரீ ஸ்ரீ கோபீஸ்வர மகாதேவருக்கு ஜெயம்!
ஸ்ரீ காமேஸ்வர மகாதேவருக்கு ஜெயம்!
ஸ்ரீ நந்தீஸ்வர மகாதேவருக்கு ஜெயம்!
ஸ்ரீ சக்கலேஸ்வர மகாதேவருக்கு ஜெயம்!
ஸ்ரீ பார்வதி பதிக்கு ஜெயம்!
ஸ்ரீஸ்ரீ சங்கரருக்கு ஜெயம்!
ஹர ஹர ஹர ஹர மகா தேவருக்கு ஜெயம்!

இப்போது நான் உங்களிடம் மிகவும் இரகசியமான விஷயங்களைக் கூறினேன். மேலும் நீங்கள் சிவபெருமானிடம் தாழ்ந்த மனப்பாங்குடனும், பிரிவுணர்வால் உண்டான கவலையுடனும் அவரை நினைப்பதால் அவர் உங்கள் மேல் கண்டிப்பாக அவரது அளவற்ற கருணையைத் தெளிப்பார்.

## ENGLISH TITLES FROM
## SRI SRIMAD BHAKTI VEDANTA NARAYANA MAHARAJA

Archana Dipika
Sri Bhajana Rahasya
Sri Bhakti - rasamrta - sindhu - bindu
Sri Bhakti - rasayana
Bhakti -tattva-viveka
The Butter thief
Confidential Secrets of Bhajan
The Essence of the Bhagavad Gita
Five Essential Essays - Prabandha Panchakam
Going Beyond Vaikuntha
Guru - Devatatma
Happiness in a Fool's Paradise
Hari Kathamrta (2 volumes)
Jaiva - Dharma
Letters from America
My Siksa-guru & Priya-bandhu
The Nectar of Govinda Lila
The Origin of Ratha Yatra
Our Gurus : One In Siddhanta, One In Heart
Sri Brhad - Bhagavtamrta
Sri Brahma Samhita
Sri Gaudiya Gia Guccha
Sri Gita Govinda
Sri Harinam Mahamantra
Sri Manah Siksa
Sri Navadvipa Dhama
Sri Prabandhavali
Sri Siksastaka
Sri Upadesamrta
Srimad Bhagavad-Gita
The True Conception of Sri Guru Tattva
Their Lasting Relation
To be Controlled by Love
Venu Gita

**WEB SITES**

http://www.purebhakti.com
http://www.bhaktistudies.com
http://www.bhaktiprojects.com
http://www.pbwebcast.com
http://www.bhaktiart.com
http://www.rangagaudiya.com
http://www.bhaktihelp.com
http://www.purebhakthi.tv

**FOR BOOKS CONTACT**

**E-mail :**

1. igvt.hbg@gmail.com
2. bvdandi@gmail.com
3. bkdasa@gmail.com

**Web :**

www.bhaktihelp.com
www.bhaktistore.com

## GLOBAL CONTACTS

*For more information, please contact us at the listings below:*

For updates, please visit our website: www.purebhakti.com
(www.purebhakti.com/centers)

இந்தியாவில், மிகவும் புகழ் பெற்று, உலகெங்கும் சென்று பக்த கோடிகளுக்கு அருள் புரியும் ஸ்ரீல நாராயண மகாராஜா, அனைத்து வேத சாஸ்திரங்களையும் அறிந்து, அவற்றின் உண்மைகளைக் கொண்டு இந்த சிவதத்துவத்தை விளக்கியிருக்கிறார். மேலும் இந்த மிகச்சிறிய தொகுப்பு, கௌடிய வைஷ்ண பரம்பரையின் பக்தி ஞானக் கடலிலிருந்து எடுத்த ஒரு சிறு துளியேயாகும்.

ஸ்ரீல பக்தி பிரஞ்ஞான கேசவ கோஸ்வாமி மகாராஜாவிடம் தீட்சை பெற்று, அவரிடமிருந்து அனைத்து பக்தி சாஸ்திரங்களையும் அவர் வாழ் நாட்கள் முழுக்கப் பயின்றவர். மேலும், ஸ்ரீல பக்தி வேதாந்த சுவாமி பிரபு பாதாவை சிக்ஷ குருவாகவும் ஏற்றவர். ஸ்ரீல நாராயண மகாராஜாவின் அளப்பரிய பக்தித் தொண்டும் அவரது சாஸ்திர ஞானமும் உலகறிந்த உண்மை. அவரது மென்மையான மற்றும் கருணை பொழியும் குணமும், இந்த உலக மக்களுக்கு தானே ஓர் உதாரணமாக வாழ்ந்து காட்டும் தன்மையும், அவருடன் தொடர்பு கொள்ளும் எவரையுமே பக்தித் தொண்டில் சுண்டி இழுக்கும் என்று கூறினால் அது மிகையாகாது.

---

"சிவபெருமான் அளவில்லாத கருணையுடையவர்;
அன்பின் உறைவிடமும் அவரே".

- ஸ்ரீல நாராயண மகாராஜா



# சிவ தத்துவம்

"வைஷ்ணவானாம் யதா ஸம்பூஹ்"

"சிவ பெருமான் தான்
எல்லா வைஷ்ணவர்களிலும்
மேலான முதல் வைஷ்ணவர்"

(ஸ்ரீமத் பாகவதம் காண்டம் - 4)

இரக்கமும் கருணையும் கிருஷ்ண பக்தர்களான வைஷ்ணவர்களிடம் எப்போதும் குடிகொண்டிருக்கும் சொத்து. அவர்களில் சிவபெருமானே மிகச் சிறந்தவர்.

ஆத்ம முக்தியின் பாதைக்கு அவரே பாதுகாவலர்.

சிவதத்துவம், அனைத்து உலக மக்களுக்கும் இறையன்பை வழங்கும் ஒரு மகத்தான அற்புதம்.